
ISSN 1703-9185

# ஆத்மஜோதி

**Arthmajothy**

**April - June 2017**
ஏவிளம்பி வருட
சித்திரை - ஆனி2017
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



ஈழத்து மகாஞானி சிவயோக சுவாமிகள்

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க





**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***

**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***

**Homelife/Future Realty Inc.,Brokerage,**
**7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8**
**905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229**

# வாகன விபத்தா? அழையுங்கள்

# MR. P. SINGARAJ



**MICHAEL TAYLOR**
**A PROFESSIONAL CORPORATION**



NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!

**வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.**



HONEST AND FRIENDLY SERVICE
**CALL: MR. P. SINGARAJ**
**416-993-8443**
**905-471-3058**




உ
*சிவமயம்*

# ஆத்மஜோதி

*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

கனடா மலர் 18:
இதழ் 1
*ஏவிளம்பி வருடம்*
*சித்திரை - ஆனி*
*திரு. ஆண்டு -2048*
*ஆங்கில ஆண்டு 2017*

**கௌரவ ஆசிரியர்**
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி
**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651



**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
ARTHMAJOTHY ILLAM
1473 Birchmount Rd.
Toronto, ON. M1P 2G4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org


## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 2 |
| எங்குமுள்ள பிள்ளையார் | 4 |
| மலையகத்தில் ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகள் | 5 |
| சீவனைச் சிவமாக்கும் வாசகம் | 8 |
| சுந்தரர் தேவாரம் | 12 |
| பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி - பாகம் 13 | 17 |
| அறச்சாலைகளும், தர்மசாலைகளுமான சைவாலய மடங்கள் | 20 |
| பதினொராம்திருமுறை | 25 |
| உறக்கத்திலும் உன் நினைவு | 32 |
| ஆத்மீகவள்ளலின் ஆன்மீகப்பணிகள் | 40 |
| இந்து சமயப் பேரவைச் செய்திகள் | 43 |
| நினைவலைகள் | 45 |
| ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை | 47 |

# தந்தையர் தினம்

இவ்வாண்டு யூன் 18ஆம் நாள் தந்தையர் தினம் வருகின்றது.

தந்தையர் தினம் தாயார் தினம் என்பன எமது மரபில் தந்தை தாயார் இறந்த தினங்களைக் குறிப்பன. எனின், மேற்கத்தைய மரபில் அவற்றின் அர்த்தங்கள் வேறானவை என்பதை இந் நாட்களிற் பலரும் அறிவர்.

இம்மரபில் தந்தை அல்லது தாயார் தினம் என்பது அவர்களின் மதிப்பையும் பெருமையையும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கும் ஒரு நாளாகவும் அவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கி உறவை வளர்க்கும் ஒரு பந்தபாச நாளாகவும் போற்றப்படுகின்றது.

தமிழ்ப் பிள்ளைகள் பெரிதும் பெற்றோருடனேயே வாழ்வர். திருமணமானபின்னரும் கூட்டுக் குடும்பப் பாரம்பரியம் தொடர்வது வழக்கம். இந்நிலையில் தந்தையருக்கென்று அல்லது தாயாருக்கென்று தனி நாள் ஒதுக்கி அவர்களைப் போற்றும் வழக்கம் எம்மிடம் வளரவில்லை.

இருந்தாலும் இந்த மேற்கத்தைய நாகரிகம் எமது நாகரிகமாகவும் இக்காலத்தில் வளர்ந்து வருவது ஒரு நல்ல சகுனமாகவே படுகின்றது.

தந்தைசொல் மிக்கதோர் மந்திரமில்லை என்றாலும் தந்தைக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் இடைவெளிச் சிக்கல் நடைமுறையில் வலுப்பெற்று வருவது எல்லாச் சமூகத்தினர் மத்தியிலும் காணப்படுவதொன்று.

கூட்டுக் குடும்பம் தனிக்குடும்பங்கள் ஆவதும் காணிகள் பிரிக்கப்படுவதும் சுயநலங்களால் பாகப்பிரிவினைகள் பகைமையை

---

இறைவழிபாடு என்பது மனித சமுதாயத்தை விலங்கு உணர்விலிருந்து தேவ நிலைக்கு உயர்த்துவதாகும்.

வளர்ப்பதும் கோடுகள் ஏறி வழக்காடுவது எல்லாம் பெற்றார் பிள்ளைகளுக்கிடையில் வளரும் இடைவெளி வெடிப்புகளின் விளைவாகும்.

தந்தையர் தினம், எம்மை அக்கறையுடன் வளர்த்து ஆளாக்கி, சான்றோராக்கி வாழவைத்த தந்தைக்கு நன்றிக்கடன் செலுத்தும் நாளாகப் போற்றப்படுகின்றது.

'ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' என்னும் புறநாற்றூற்றுப் பாடலுக்கிணங்க பிள்ளைவளர்ப்பில் தந்தைக்குப் பெரும் பங்குண்டு.

அதனால் தந்தையர் தினம் பேணப்படல்வேண்டும். கொண்டாடப்படல் வேண்டும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.


**கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்**
**சர்வதேச தர்ம பரிபாலன அறக்கட்டளைக்கு வாரி வழங்குங்கள்**

**ஆதீன விலாசம்:**



கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்
இராமலிங்க வள்ளலார் சர்வதேச தரும பரிபாலன அறக்கட்டளை, மேட்டுக்குப்பம் 807802
நெய்வேலி வழி கடலூர் மாவட்டம்
ஆதீனத் தொலைபேசி இலக்கம்: 04142-645484
கைத்தொலைபேசி இலக்கம்: 9443359245

அனாதரவான சிறார்களையும், ஆதரவற்ற முதியோர்களையும் பராபரிக்கும் தர்ம ஸ்தாபனமான நிறுவனத்திற்கு நன்கொடை அளித்து உதவி செய்யுங்கள்.

நடக்கமுடியாத நிலையில் படுக்கையில் படுத்தபடி நிறுவனத்தைப் பரிபாலிக்கும் மகா ஞானியான கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளின் தன்னிகரில்லா தன்நலம் அற்ற சேவைக்கு நிதி உதவி செய்து சுவாமிகளின் சுமையை குறைத்து அருளாசிகளைக் பெறுவீர்களாக!


இறைவழிபாடு என்பது மக்களிடம் உள்ள பொறாமை பேராசை கோபம் புறங்கூறுதல் போன்ற தீயகுணங்களை நீக்குவதாகும்.

உ

# எங்குமுள்ள பிள்ளையார்

## வஞ்சி விருத்தம்

உண்மை இன்மை உருவினான்
அண்மை சேய்மை அருளினான்
நுண்மை விண்மை நூதனன்
வண்மை வார்க ரத்தனே.

மந்தி ரத்தில் வந்தனன்
வந்து வான கத்தவர்
அந்த ரத்தை யாற்றினான்
சுந்த ரக்கைத் தும்பியே.

கண்ணில் ஆடுங் காவலன்
பண்ணிற் பாடும் பாவலன்
எண்ணில் நாடும் ஏவலன்
அண்ணல் ஐங்கரத்தனே.

வேத மூல வித்தகன்
போத ஞான புத்தகன்
நீதி பேணும் நித்தியன்
ஆதி ஐங்க ரத்தனே.

மோன வான்ற தமிழ்முனி
கூனிச் சென்னி குட்டவே
கானில் வேடங் காட்டினான்
ஆனை மாமு கத்தனே.

வி. கந்தவனம்

---

இறைவழிபாடு என்பது மக்களிடம் அன்பு கருணை கொடுக்கும் குணம் பெரியோர்வணக்கம் பொறுமை சாந்தம் முதலிய நற்குணங்களை வளர்ப்பதும் ஆகும்.

# மலையகத்தில் ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகள்

ஆத்மஜோதி நா. முத்தையா

ஒரு நாள் வசுவண்டியில் செல்லும் போது இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் காவி உடைதரித்த ஒருவர் தோளில் மண் வெட்டியுடன் செல்வதைக் கண்டேன். சிவபெருமான் செம்மனச் செல்விக்காகப் பிட்டுக்கு மண்சுமந்த தோற்றமும் இப்படித்தான் இருந்திருக்குமோ என்று எண்ணிக் கொண்டேன்.

மற்றொரு நாள் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிலில் கிருபானந்தவாரியார் சுவாமிகளின் பிரசங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது முதல் வரிசையில் இருந்து ஒருவர் பிரசங்கத்தை இரசித்துக் கொண்டிருப்பதைக் கவனித்தேன். முன்பு இணுவில் வீதியில் கொட்டுடைத் தோளராகக் காணப்பட்டவரே இவர் என்பதையும் அறிந்து கொண்டேன்.

மிருசுவிலைச் சேர்ந்த த. நல்லதம்பி அவர்கள் திருநெறிக் கழகம் அமைத்து கிளிநொச்சியில் சமய சமூகப் பணியில் ஈடுபட்டிருந்த காலம். சைவசமயத்தைச் சார்ந்தவர்களுக்கு கைகொடுத்து உதவவேண்டிய காலமும் அதுவாய் இருந்தது, அடியேனுக்கும் ஓர் அழைப்பு வந்தது. அங்குதான் ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகளை முழுமையாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சுவாமிகளிடத்தில் காணப்பட்ட சமய, சமூகப்பணியின் ஆர்வம், அவரின் பிரசங்க வன்மை, குரல்இனிமை, எளிமையான வாழ்வு இவை எல்லாம் சேர்ந்து அவரை மலையகத்திற்கு அழைக்க வேண்டும் என்று என் மனதில் தூண்டியது. அடியேனுடைய கருத்தைச் சுவாமிகளிடம் கூறியபோது "கொல்ல தெருவில் ஊசி விற்க வேண்டாம். அத்தகைய இடங்களில் முழுநேரப் பணியாற்றுவதே நன்று" எனத் தாம் விரும்புவதாகவும் கூறினார்கள்.

---

இறைவழிபாடு என்பது இறைமையை நினைந்து நினைந்து இறைமயமாவது ஆகும்

அக்காலத்தில் யோகர் சுவாமிகளிடம் அத்தியந்த பக்தி கொண்டவரும் றெயில்வேயில் FPL உத்தியோகம் பார்த்தவரும் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வருமான கந்தையா என்பவர் கற்றனில் இருந்தார். அவர் குடும்பத்தினர் சுவாமிகளிடம் நல்ல ஈடுபாடு கொண்டவர்கள். அதனால் திரு. கந்தையா அவர்களுடைய இல்லத்தை மையமாகக் கொண்டு சுவாமிகள் தமது பணியைத் தொடங்கினார்கள். அடியேனும் பாடசாலை முடிந்ததும் நாவலப்பிட்டியில் இருந்து தினமும் கற்றன் சென்று அப்பணிகளில் பங்கு கொண்டு திரும்பும் வழக்கம் இருந்தது.

இவ்வாறு 'டெக்லஸ் பாகை' என்ற இடத்தில் தாமரை வல்லித் தோட்ட முகாமையாளரான திரு. கிருஷ்ணபிள்ளை குடும்பம் இருந்தது. அக்குடும்பத்தினர் சுவாமிகளிடம் நல்ல ஈடுபாடு உள்ளவர்களாக விளங்கினர். அவர்களுடைய அழைப்பின்பேரில் அங்கு சென்று தாமரைவல்லித் தோட்டத்தை மையமாகக் கொண்டு அப்பகுதியிலுள்ள பல தோட்டங்களுக்கும் சென்று சுவாமிகள் நமது பணியை ஆற்றினார்கள்.

நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி நிலையத்தில் இருந்து கொண்டே சுவாமிகள் சுற்றுவட்டாரத்தில் உள்ள தோட்டப் பகுதிகளுக்குச் சென்று பணியாற்றும் ஒழுங்கினை 'ஆத்மஜோதி நிலையம்' செய்து வைத்தது.

இதற்குத் துணையாக கதிரேசன் கல்லூரி அதிபராக இருந்த பண்டிதர் திரு. க. சபாஆனந்தர் B.A., B.O.L அவர்களும் நாவலப்பிட்டி மாரியம்மன் தேவஸ்தானத்தினரும் கதிரேசன் கல்லூரி மனேச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களும் ஓவசியர் திரு. வேலுப்பிள்ளை அவர்களும் கதிரேசன் கோயில் முகாமையாளராக இருந்த இராமன் செட்டியார் அவர்களும் சுவாமிகளின் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

---

இறைவழிபாடு என்பது ஏழைகளுக்கு தவறாது உதவுவது ஆகும்.

இங்கிருந்து கொண்டே உழப்பனை, கம்பளை, கண்டி வரையிலும் தலவாக்கொல்லை, நுவரெலியா, பண்டாரவளை, பதுளை வரையிலும் சுவாமிகளின் பணி விரிவடைந்தது.

சுவாமிகளின் தோற்றமும் இனிய பண்பாடும் மக்கள் மனதைத் கவர்ந்ததில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. சுவாமிகளுக்கு இப் பணி மலையக யாத்திரை என்றே குறிப்பிடலாம்.

மலையகச் சூழலும், அங்கு நிலவும் அமைதியும் இயற்கை எழிலும் சுவாமிகளின் உள்ளத்தைக் கவர்ந்ததோடு அவரது தியான சமாதிகளுக்கும் அவை பெரிதும் துணைபோயின.

ஆயினும் சுவாமிகளுக்குக் கிளிநொச்சியில் பெரும்பணிகள் காத்திருந்தன. ஆதலால் சுவாமிகள் கிளிநொச்சியில் ஜெயந்திநகர் என்ற இடத்தில் மகாதேவ ஆச்சிரமம் அமைத்து தமது பணிகளைத் தொடர்ந்தார். அவர் மகாதேவ ஆச்சிரமத்தில் இருந்த காலத்தில் மலையக மக்கள் வடக்கே வரும் போதெல்லாம் சுவாமிகளைத் தரிசிக்கத் தவறுவதில்லை. சுவாமிகளும் அவர்களை, இன்முகத்துடன் வரவேற்று ஆறுதலளித்து ஆசிகூறி அனுப்பிவைத்த காட்சி கண்ணை விட்டு நீங்காது.

---

## 2016 தை மாதத்திற்குப்பின் ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்

| | |
|---|---|
| வே. சிவபாலன் நினைவாக (2016) | $100.00 |
| க. சண்முகம் இளைப்பாறிய அதிபர் நினைவாக | $200.00 |
| இராஜநாதன் கணேஸ் நினைவாக (2016) | $310.00 |
| ஸ்ரீ முருகன் குடும்பம் (2016) | $250.00 |
| செல்வி கமலா சிங்கநாயகம் (2016) | $200.00 |
| பேரறிஞர் முருகவே பரமநாதன் நினைவாக (2016) | $100.00 |
| திருமதி. இத்தினம் இராசேஸ்வரி நினைவாக(2016) | $200.00 |
| செல்வி. நளினி சரவணமுத்து நினைவாக(2017) | $200.00 |
| திரு சிவமுத்துலிங்கத்தின் பிறந்தநாள் நிதி (2016) | $450.00 |

## சீவனைச் சிவமாக்கும் வாசகம் திருவாசகம்

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்

சென்ற இதழ் தொடர்ச்சி

**அடியவர்களை ஆட்கொள்வது? கருணையா? கடமையா?**

இறைவனைக் கருணை வள்ளல் எனக் கூறுகின்றோம். நல்லவர்களை அவன் ஆட்கொள்வது கடமையாகுமேயன்றிக் கருணையாகாது. பெரும் பொய்யர்களை ஆட்கொண்டால்தான் அவன் கருணை வள்ளல் என்பது மெய்ப்பிக்கப்படும். தன் கருணையை உலகினர்க்கு மெய்ப்பிப்பதற்காகவே தன் போன்ற பொய்யர்களை இறைவன் ஆட்கொண்டிருக்கிறார் என மணிவாசகர் கூறுகின்றார். இவர் உலகில் வாழும் மக்கள் கடைத்தேறுவதற்காகவே திருவாசகத்தை அருளினார். சாமானிய மக்களின் இயல்புகளைத் தன்மேல் ஒற்றி இறைவனிடம் விண்ணப்பம் செய்கின்றார். உலகில் தன் கருணையை மெய்ப்பிப்பதற்கு ஆட்கொண்டுவிட்டுப் பின்னர் இவன் தகுதி உடையவன் அல்ல என்று நிராகரித்து விட்டால் என் செய்வது? அவன் நிராகரிக்க நினைத்தாலும் அவனுடைய திருவருட் சத்தி நிராகரிக்க விடாது என நம்புகிறார். திருவருள் சக்தியை அருளாளர்கள் திருப்பாதம் எனச் சொல்வது வழக்கம். அத் திருப்பாதம் தன்னை விட்டு நெகிழ்ந்து போய்விடக் கூடாது என்று கருதியே " போற்றி நின் திருப்பாதம் போற்றி" எனக் கூறுகின்றார். பாதத்தை நடுவில் வைத்து முன்னும் பின்னும் போற்றி கூறி அதை நழுவிப் போய் விடாதபடி பாதுகாக்கிறார்.

**போற்றியென் போலும் பொய்யர்**
**தம்மையாட் கொள்ளும் வள்ளல்**
**போற்றி நின்பாதம் போற்றி**
**நாதனே போற்றி போற்றி**

- திருச்சதகம்.

---

எண்ணெய் உள்ளவரை தீபம் எரியும். வினை உள்ளவரை தேகம் நிலைக்கும்.

அன்பினால்தான் உரிமை வரும் என்பதை நாம் அனைவரும் உலகியல் வாழ்வில் உணர்ந்துள்ளோம். அன்பின் முதிர்வில் ஏற்படுவதுதான் பக்தி. இறைவன் பக்தர்களின் உள்ளே கலந்து உறவாடிக் காத்து இன்பம் செய்தலின் அவன் மக்களுக்கு அனுபவப் பொருளாக விளங்குகிறான்..

"மக்கள் அனுபவிக்கும் பொருள்களைத் தொல்காப்பியர் கூற வந்தபோது தெய்வத்தையும் அனுபவப் பொருளாக முதலில் கூறினார்". தொல்காப்பியம் - பொருளதிகாரம், அகத்திணையியல் -20. ஆன்மாக்கள் இறைவனின் பாதக் கமலங்களை இறுகப் பற்றிக் கொண்டால்தான் வினைப்போகங்களில் இருந்து விடுபட முடியும். பிடிக்கின்ற பிடி பலமானதாக இருத்தல்வேண்டும். குரங்குக் குட்டியானது தன் தாய் வயிற்றை இறுகப் பற்றிக் கொள்ளும். குரங்கு மரங்களின் கிளைகளில் தாவும் போது தாய்க் குரங்கு குட்டிக் குரங்கைப் பற்றிக் கவலைப்படாது. "பால் நினைந்தூட்டும் தாயினும் சால" என்ற பிடித்த பத்துப் பாடலில் குரங்குக் குட்டியைப் போல நான் இறைவனை இறுகப் பற்றிக் கொண்டேன். என்னை விட்டு உம்மால் எங்கே செல்ல முடியும் என்பதை "யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே" என்று உரிமைப் பாட்டுடன் வேண்டுவதைக் காணலாம்.

### கற்போர் இதயம் கவரும் கற்கண்டுத் தமிழ்

வாதவூரடிகள் அருளிய திருவாசகத் தேன் தொல்லை தரும் பிறவித் தளையை நீக்கும்; அல்லல் அறுக்கும்; ஆனந்தமாக்கும்; ஓதுவார் கருங்கல் மனதையும் கரைக்கும்; கண்கள்தொடு மணற் கேணியில் சுரந்து நீ பாயும்; மெய் சிலிர்ப்படையும்; காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்நெறிப் படுத்தும்.

பல மலர்களிலிருந்து எடுக்கப்பட்ட தேன் எவ்வாறு உடற்பிணியை அகற்றுகின்றதோ அது போலத் திருவாசகத் தேன் உயிருக்கு

---

இறைவழிபாடு என்பது எல்லா உயிர்களிடத்தும் இறைவர் விளங்குகின்றார் எனறு உணர்வதாகும்.

ஏற்படும் பிறவிப் பிணியை அகற்ற வல்லது..

**"தேசனே தேனார் அமுதே சிவபுரனே"**
**"உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து"**
**"தேனாய் இன்னமுதாயத் தித்திக்கும் சிவபெருமான்"**

என்றெல்லாம் மணிவாசகர் இறைவனைப் போற்றி இறைவன் அடியார் சிந்தனையுள் தேன் போலக் கலந்து நின்று பிறவி நோயை நீக்குவான் என்று கூறியுள்ளார்.

திருவாசகம் தேன் அமுது; தேனினும் தெள்ளிய அமுது அழுது அழுது ஆண்டவனைத் தொழுதவர் மணிவாசகர். சிவஞானத் தேடலின் வேட்கையில் விளைந்த விசும்பல் மொழியே திருவாசகம். ஊனை உருக்குவதோடு உயிரையும் உருக்கும் தன்மை திருவாசகத்திற்கு உண்டு. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பு. று. போப் ஐயா அவர்கள் திருவாசகம் ஊனினை மட்டும் உருக்கவில்லை, எலும்பையும் உருக்கும் தன்மை உடையது என்கிறார். மணிவாசகர் கழிவிரக்கத்தில் தம்மைக் கரைத்து மனத்தைத் தூய்மைப்படுத்துகின்றார்.

**"யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்**
**ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"**
- திருவாசகம், திருச்சதகம்

நிலம் உழ உழ பக்குவம் பெறுகின்றது. அந்த நிலம் தன் மடிக்குள் மறைந்திருந்த உயிர் ஊட்டத்தை விதைக்கு ஊட்டின. விளைச்சலை வீரியம் ஆக்குகின்றது. ஆலையில் பிழியப்பட்ட கரும்பே கற்கண்டாய் இனிமை தருகின்றது. உருகிய உலோகம் உருவங்களாய் மாறிப் பயன் தருகின்றன. பயன்தரு பொருட்களாய் மாற மூலப்பொருள் பக்குவப்படல் வேண்டும்; உருக வேண்டும்; இளக வேண்டும்; இளக்கத்திற்கு பின்பு தோன்றுகின்ற இறுக்கமே

---

இறைவழிபாடு என்பது பிற உயிர்களுக்கு துன்பம் உண்டாகாதவாறு ஒழுகுதலே ஆகும்.

இறுதியானது; உறுதியானது. காந்தம் கண்ட இரும்பு போல் கற்போர் இதயம் கவரும் கற்கண்டுத் தமிழ் திருவாசகம்.

**திருவருளனுபவமே திருவாசகப் பாடல்கள்**

திருவாசகம் பாடல்கள் மட்டும் அல்ல; திருவருளனுபவம்! இறைவனின் திருவருளுக்கு மொழியால் வடிவம் தந்தார் மணிவாசகர். இந்தப் பண் சுமந்த பாடல்களைப் பரிசாகப் பெற்றான் இறைவன். மாணிக்க வாசகருடைய அன்பினால் சிவம் விளைந்தது. அன்பும் சிவமும் கலந்த மாணிக்கவாசகரால் திருவாசகம் அருளப்பட்டது. தெய்வவாசகமாகிய திருவாசகம் மக்களுடைய இதயத்தில் உள்ள இருளினை அகற்றி இன்பம் விளைவிக்கிறது. திருவாசகம் ஓதிச் சிறந்திடுக, கருவாதனை இன்றி வாழ்ந்திடுக.

---

**ஆத்மஜோதி சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதற்கு வருடந்தோறும் நிரந்தர நிதி உதவி வழங்குவோர்**

| | |
|---|---|
| திரு. செல்லத்துரை சோமசுந்தரம் | $ 200.00 |
| செல்வன். மனோகாந்தன் விசாகன் | $ 200.00 |
| செல்வன் மனோகாந்தன் யாதவன் | $ 200.00 |
| திரு. விநாயகர் கந்தவனம் | $ 200.00 |
| திரு. வடிவேலு உமாகாந்தன் | $ 200.00 |
| திருமதி இராசமலர் சின்னராஜா | $ 200.00 |
| திரு. வடிவேலு ஞானகாந்தன் | $ 200.00 |
| திருமதி ஸ்ரீரங்கநாயகி சபாரத்தினம் | $ 200.00 |
| திருமதி. கோகிலாம்பாள் கனகசபாபதி | $ 200.00 |
| திரு. ம. வரதகுமார் | $ 600.00 |
| திரு. சு. சிவபரமானந்தம் | $ 200.00 |
| திருமதி தங்கமுத்து தம்பித்துரை | $200.00 |
| அமரர் சரவணமுத்து ஞானசம்பந்தர் நினைவாக | $200.00 |
| அமரர் கந்தையா செல்லப்பா நினைவாக | $ 200.00 |
| திரு. இ. முருகேசு | $ 200.00 |
| திரு V. N.. சோமசுந்தரம் | $ 400.00 |
| அமரர் சின்னத்தம்பி செந்திவடிவேல் நினைவாக | $ 200.00 |
| ஈ. மகேந்திரநாதன் | $ 200.00 |

# சுந்தரர் தேவாரம்

வித்துவான் க. கார்த்திகேசு B.A.

சொற்பதப் பொருள் இருளறுத்தருளும் தூயசோதியனாகிய சிவபெருமான், ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, எப்பொழுதும் வேதமோதிய வண்ணம் இருக்கின்றார். அவர், வேதமோது கின்றபடியால்தான் சிருஷ்டிகள் ஞானநாட்டமுடையன வாகின்றன. ஞானோதயமும் அதனூடாக முத்திப்பேறும் இறைவனுடைய இக்கிருத்தியத்தால்தான் ஏற்படுகின்றன. சமயகுரவர் நால்வரும் எம்பெருமான் வேதமோதுவதைப் புகழ்ந்து பாடினர். திருப்பழனப் பதிகத்தைச் சம்பந்தர் "வேதமோதி" என்று தொடங்கினார். "வேதமோதும் விரிசடை அண்ணலார்" என அப்பர் ஏத்தாநின்றார். "வேதமோதி வெண்ணீறு பூசி" என்று சுந்தரர் பாடினார். "வேத மொழியர்" என மணிவாசகர் அன்னைப் பத்தைத் தொடங்கினார். இறைவன், தாம் வேதமோதுவதோடு நின்று விடவில்லை. அறங்குன்றி மறமோங்கும் பொழுதெல்லாம் அவதார புருடர்களை அனுப்பி, அவர்கள் வாயிலாகவும் வேதத்தை ஆன்மாக்களுக்குப் புகட்டினார். எம்பிரான், எம்மீது கொண்ட கரையிலாக் கருணைகாரணமாகவே சமயகுரவர் நால்வரையும் தந்தருளி, வேதசாரம் நிறைந்த தேவாரத்தையும் திருவாசகத்தையும் பாடுவித்தார்.

சுந்தரர் தேவாரத்தைப் பற்றி இக்கட்டுரையிற் சில குறிப்புகள் தரப்படுகின்றன. பொதுவாகத் தேவாரத்தைப்பற்றிக் கட்டுரை எழுதுதல் இலகுவான காரியமன்று. தேவாரம் ஒவ்வொருவர் மனத்திலும் நாவிலும் ஊர்வது; தேடித்தேடொணாத் தேவனை எம்முன்னே தேடிக்கண்டு கொள்வதற்குச் சாதனமாகவுள்ளது. துஞ்சியும் பிறந்துஞ் சிறந்துந் துயக்கறாத மயக்காகவுள்ள வாழ்க்கையை ஒழித்தற்குத் தொண்டரீயன பாடும் வண்ணம் சுந்தரர் புத்தி கூறுகின்றார். அவ்வாறு பாடுந் தொண்டுதான் தேவாரம். திருவலஞ்சுழிவாணனை வாயாரப் பாடிவழிபடும் புண்ணியத்தைச்

---

இறைவழிபாடு என்பது நம்மிடம் உள்ள குறைகளைகண்டுபிடித்து நம்மை நாமே சீர்படுத்திக்கொள்வது ஆகும்.

செய்தவர்களாகிய சைவர்கள், அந்தியும் நண்பகலும் தேவாரத்தைப் பாடவேண்டும். அது மருந்தும் மந்திரமுமாகவுள்ளது. இம்மையில் வந்து மூடும் முன்னைச் செய்வினையைப் போக்கவல்லது. அறிதற்கரிய மறைகளைத் தேவாரமாகத் திரட்டி எமக்கருளினர் சுந்தரர். அத்தகைய பெருமைவாய்ந்த தேவாரத்தை நாம் நன்கு பயின்று நாவால் நவின்று, முக்கண்ணனின் அடிசேர முயல வேண்டும். அவ்வாறு செய்யத்தவறியவர்கள் காக்கைக்கே இரையாகிக் கழிவரே.

தேவாரம் பாடிய மூவருள் சுந்தரருடைய வாழ்க்கையே எம் வாழ்க்கை போன்றது. சம்பந்தர் இளமையிற் சோதியுட் கலந்தார். அப்பர் துறவு பூண்டு முத்தியடைந்தார். சுந்தரரோ இல்லறத்திற் புகுந்து, மனை வாழ்க்கை மகிழ்ந்து, சுந்தர வேடங்களால் துரிசு செய்த தொண்டனாய்த் திகழ்ந்தார். அவருக்குப் பொன்னும் போகங்களும் வேண்டியிருந்தன. அவர் சாதாரண மக்கள்போல நோயால் வருந்தினார். அவருக்குத் துன்பங்களும் ஏற்பட்டன. போகியும் யோகியுமாயுள்ள இறைவன் போகிக்கு எடுத்துக்காட்டாகச் சுந்தரரை எங்களுக்குத் தந்தார்போலும்.

கல்விகற்று, தொழிலில் அமர்ந்து, குடும்ப வாழ்க்கை நடத்தி, பிள்ளைகளை ஒருவழியில் விட்ட பின்னர்தான் ஒருவர் கடவுளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பது சாதாரண மக்கள் கருத்து. அதாவது கடவுள் வழிபாடு அறுபது வயதுக்குப் பிந்தியது எனச் சுருக்கமாகக் கூறிவிடலாம். இக்காலத்திலல்ல எக்காலத்திலும் இவ்வெண்ணம் மக்களிடையே இருந்து வந்திருக்கிறது. சுந்தரர் காலத்தவரும் அப்படியே எண்ணினர்.

தேகபலம் மனோபலம் இளமையில்தான் உண்டு. வயது வர இவை குன்றிவிடும். உடலானது நோய்வாய்ப்பட்டுத் தளர்ந்து எதையும் செய்ய முடியாத நிலையை அடைந்துவிடும். மற்றக்கருமங்களைச் செய்தற்கு இளமை பொருத்தமாய்

---

இறைவழிபாடு என்பது எல்லா உயிர்களையும் தம்முயிர்போல கருதுவதாகும்.

இருப்பதுபோல, கடவுளை வழிபடுதற்கும் அதுதான் பொருத்தமானது. ஆனபடியால் கடவுளைத் தேடுவதற்கு அறுபது வயது வரை காத்திருத்தல் தப்பிதம். இளமைதான் அதற்கு மிக உயர்ந்த காலம். சுந்தரர் இவ்வுண்மையை பின்வரும் தேவாரத்தில் விளக்கி யிருக்கிறார்.

**புறந்திரைந்து நரம்பெழுந்து நரைத்துநீஉரை யால் தளர்ந்து அறம்புரிந்து நினைப்பதாண்மை அரிதுகாணிஇ:. தறிதியேல் திறம்பியாதெழு நெஞ்சமேசிறு காலைநாமுறு வாணியம் புறம்பயத்துறை பூதநாதன் புறம்பயந்தொழப் போதுமே.**

"நெஞ்சமே" என்று சொல்லும்பொழுது அவர் எங்கள் ஒவ்வொருவரையுஞ் சுட்டுகிறார். கடவுளைத் தேடுதல், நாம் சிறு காலையில் (இளம் பராயத்தில்) செய்யவேண்டிய வாணியம் (வாணிபம்) என்ற பாடத்தை எங்களுக்குக் கற்பிக் கின்றார். இவ்வுண்மையைச் சுந்தரருடைய வாழ்க்கையும் உணர்த்துகின்றது. கல்வியும், தொழிலும், பிள்ளையும் எம்பிரயாணத்தில் தோன்றும் காட்சிகள்.

வாழ்க்கையில் எங்களுக்கு அனேக தேவைகளுண்டு. கல்வி, பணம், தேகாரோக்கியம் ஆகியவற்றைப் பெறுவதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் முயலுகிறோம் என்பதைச் சிந்திப்போம். எங்களைப் போலத் தேவைகளுள்ளவர்களும், நாங்கள் கேட்பதைத் தருவதற்குத் தகுதியில்லாதவர்களான பிற மனிதரைத்தான் கேட்கிறோம். நோய் பிடித்தவுடன் ஒரு வைத்தியரிடம் ஓடுகிறோமேயன்றி, எல்லாந் தர வல்லவராகிய இறைவனை நாங்கள் எண்ணுவதில்லை. சுந்தரர் தமக்குக் கஷ்டங்கள் ஏற்பட்ட பொழுது, இறைவனிடமே முறையிட்டார். பொன் வேண்டிய பொழுதும் இறைவனிடமிருந்துதான் பொன்னைப் பெற்றார். பெண்ணையும் இறைவனைத் தூதனுப்பித்தான் பெற்றார். அவருக்கு வேண்டிய சகல தேவைகளையும் சிவபெரு மானிடம் முறையிட்டே பூர்த்தி செய்தார். இவ்வாறு நாங்கள் ஒவ்வொருவரும்

மனிதரிடமின்றிக் கடவுளிடமே முறையிட்டு எங்களுக்கு வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனச் சுந்தரர் விரும்பினார். வேண்டுவார் வேண்டுவன வெல்லாம் ஈயும் கருணை வள்ளலிடமே நாங்கள் வேண்டுதல் செய்ய வேண்டுமென்ற கருத்தடங்கிய திருப்புகலூர்ப் பதிகத்தை நோக்குவோம்.

**"தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ்**
**சார்கினுந் தொண்டர் தருகிலாப்**
**பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை**
**புகலூர் பாடுமின் புலவீர்காள்**
**இம்மையே தருஞ்சோறுங் கூறையும்**
**ஏத்தலாம் இடர் கெடலுமாம்**
**அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு**
**யாதும் ஐயுற வில்லையே."**

இத்தேவாரம் மாத்திரமல்ல, இப்பதிகத்திலுள்ள எல்லாத் தேவாரங்களையும் நாங்கள் பன்முறையும் படிக்க வேண்டும். கடவுளையே எங்கள் புகலிடமாகக் கொள்ளப் பழகவேண்டும். புகலூரில் எழுந்தருளிய ஈசனைப் பாடினால் இம்மையிலும் அம்மையிலுமுள்ள சகல போகங்களையும் நாம் எளிதிற் பெறலாம். பொய்ம்மையாளரைப் புகழ்வதால் எங்களுக்கு எவ்வித நன்மையும் அமையப்போவதில்லை. சுநதரர் இவ்வுண்மையை எங்களுக்குக் கற்பிக்கிறார்.

இறைவன் பிழை செய்பவர்களுடைய பிழைகளைப் பொறுத்து, அவர்களுடைய குற்றங்களைக் குணமாகக் கருதும் தன்மையுடையவர். ஒருவன் எவ்வளவு பாவஞ் செய்தவனா யிருந்தாலும் "எம்பெருமானே! என்னைக்காத்தருள வேண்டும்" என்று அவருடைய திருவடிகளை வணங்குவானாகில், அவனுக்கு வீடுபேற்றையே அளித்துவிடுவார். சுந்தரர், தாம் ஒரு பாவி என்றே கருதினார். "அழுக்கு மெய்யுடையவன்" என்றும் "கொடியவன் என்றும்", "பலபொய்யேயுரைப்பவன்" என்றும் தம்மைக் கூறிக் கொண்டார். எனினும்,

---

உடைமைகளில் உயர்ந்தது சத்தியம்.

**"அடியேன், புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம் போற்றி**
**போற்றி என்றன்போடு புலம்பி**
**அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்**
**ஆவடுதுறை ஆதிளம் மானே"**

தாம் பாவியாயிருந்தாலும், தமக்குக் கட்டாயம் வீடுபேறு தரவேண்டு மென்று இறைவனோடு வன்மை பேசினார். அவ்வாறு தான் கேட்பதற்கு நியாய மென்னவெனில்:

**"நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்**
**நாவினுக் கரையன் நாளைப்போ வானும்**
**கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி**
**கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள்**
**குற்றஞ் செய்யினுங் குணம்எனக் கருதுங்**
**கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்**
**பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்**
**பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே"**

சுந்தரருடைய இவ்வேண்டுதல் கர்மிகளாகிய எங்களனைவருக்கும் வாழ்க்கையில் நம்பிக்கையையும் மனவுறுதியையும் தருகிறது. சுந்தரரை இத்தகைய சூழலிலமர்த்தித் தம்மை இவ்வாறு கேட்கும்படி செய்த சிவபெருமானுடைய திருவிளையாடல் "என் அடியார்கள் பஞ்சதுட்டராயிருந்தாலும் அவர்களுக்கு முத்தியளிப்பேன்" என்ற பான்மையை விளக்குகிறது. கீழ்வரும் திருநாவுக்கரசர் கூற்றும் இச்சந்தர்ப்பத்திற் குறிக்கற்பாலது:-

**"பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்**
**பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாயன்றே**
**இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ**
**எம்பெருமான் திருக்கருணை இருந்த வாறே."**

சுந்தரருடைய திருவடிகளை வணங்கி அடியார்க்கும் அடியவ ராகிய அவருடைய தேவாரத்தைத் தினமும் பாராயணஞ்செய்து, அவர் பெற்ற பேற்றைப் பெற முயலுவோமாக.

(நன்றி: காரைநகர் சைவமாசபை பொன்விழா மலர் 1967)

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி - பாகம் 13

சு. சிவதாஸ்
(முன்னாள் ஆசிரியர், யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி)

கடந்த இதழில் 'குருவாசகக் கோவை' என்ற நூலிலிருந்து 'குரு' என்பது பற்றிய சில பாடல்களின் பொழிப்பையும் அவை பற்றிய விளக்கங்களையும் பார்த்தோம். பகவான் ரமணரிடம் பக்தர் கேட்ட கேள்விகளுக்கு பகவான் வழங்கிய மறுமொழிகளை வெண்பா வடிவில் முருகனார் எழுதிய 1282 பாடல்களைக் கொண்ட நூலே 'குருவாசகக் கோவை' என்பதனையும், அப்பாடல்கள் முழுவதும் பகவான் ரமணரால் சரிபிழை பார்க்கப்பெற்றன என்பதையும் முற் கட்டுரையில் பார்த்தோம்.

இம்முறை குருவாசகக் கோவையில் 'சகளத்திறன்' என்ற சிறு தலைப்பின் கீழே வருகின்ற பாடல்களின் பொழிப்பைப் பார்க்கலாம். "சத்திய வஸ்துவை அறியாதவர்கள் தாம் அம் மெய்ப்பொருளுக்கு ஓர் உருவமில்லை என்று கூறுவர். ஆகாயத்தின் (அதிநுண்மைத் தன்மையால் பற்றற்று வியாபகமாயுள்ள) தன்மையைப் போன்ற ஆன்மாவின் உண்மைத் தன்மையை உள்ளபடியறிந்து அனுபவிக்கும் ஆன்ம நிஷ்டனான ஞானியின் உருவமே அம் மெய்ப்பொருளின் உருவமாகும் என்றறிக". (செய்யுள் 656). தானே எழுதிய இப்பாடலின் விளக்கத்தை தரும்போது முருகனார் பின்வருமாறு எடுத்துரைத்தார். "உண்மைக்கு உருவில்லை என்பதை இச்செய்யுளால் மறுக்கிறார் ரமணர். என்னை? உண்மையை உள்ளபடி அறிந்தமர்ந்த சகஜ நிஷ்டன் அந்த உண்மையினின்றும் வேறாகானாதலின் அவனே அந்த உண்மையின் உருவம். ஞானியே ஆன்மா என்ற வாக்கின் பொருள் இது"

"உள்ளும் புறமும் சிவபிரானின் உருவ வழிபாடு செய்யும் சிவபக்தி கொண்ட நெஞ்சமே! எல்லாவிடத்திலும் இறைவன் அறிவு வடிவாய் நிறைந்திருப்பதை மறவாத உணர்வுடன் சிவ வழிபாட்டைச் செய்க". (செய்யுள் 660)

---

உயர்ந்த உள்ளத்தில் வேற்றுமைக்கு இடமில்லை.

“சிவயோக சித்திபெற்ற ஞானிகளை சதா வழிபடுவதால் மனம் ஒருமுகப்பட்டு, இதயத்தில் ஆன்ம விசாரம் உதித்து, சுட்டறிவு நீங்கி, ‘இருக்கிறேன்’ என்ற தன்மையுணர்வு மாத்திரமாய் ஆன்மாவில் நிஷ்டை கூடி, அதனால் பிறவிப்பிணியாகிய மயக்கம் அழியும்” (செய்யுள் 661)

“வேதங்களில் கூறப்பட்டுள்ள விதிகள் தவறாது செய்யப்படும் அனுஷ்டானங்கள் கடவுளின் பாதங்களில் உண்மையானதும் ஒரு முகப்பட்டதுமான பக்தியை உனக்கு நிறைய உண்டாக்கித் தரவில்லை என்றால் அந்த அனுஷ்டானங்களில் பட்டபாடு முழுவதும் வீணே என்று உணர்க” (செய்யுள் 662)

“எப்பொழுதும் கடவுளின் திருவடிகளை வணங்குவோர், கொடிய பழியைத் தரும் பாவகர்மங்களால், நெருப்பில் இட்டாற் போன்ற, பெரிய துன்பங்களை அடையும் மனோமய வாழ்வின் கொந்தளிப்படங்கி, இன்பந்தரும் எல்லா நன்மைகளையும் ஒரு சேர அடைவர்”. (செய்யுள் 663)

“இவ்வுலக வாழ்விலும் மறுவுலக வாழ்விலும் அடையவேண்டியவற்றைப் பற்றிக் கவலைப்படாமல், பிராரப்தப்படி வரும் தடைகளை (கஷ்டங்களை) எல்லாம் மிகவும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு, எத்தகைய வறுமை வந்தாலும் கொஞ்சமும் மனந்தளராமல் இறைவனது அருள் வழியே நடந்து வருவாயாக.” (செய்யுள் - 664)

“சிவபிரானது திருவடிகளை அடைவதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழும் சிறந்த சாதுக்கள், உலக மக்கள் தம்மைப் பார்த்துப் பொறாமை கொள்ளும்படியான (ஆடம்பர) வாழ்க்கைக்கு இடம் தராமல் அவர்கள் தம்மைப் பார்த்துப் பரிதாபப் படத்தக்க (எளிய) வாழ்க்கையுடையவர்களாய் வாழ்தல் மிகவும் நல்லதாகும்.“ (செய்யுள் - 665)

---

இறைவழிபாடு என்பது நடப்பன யாவும் நம்முடைய நன்மைக்கே என்று நினைந்து வாழ்வதாகும்

பக்தர்கள் ஆங்காங்கே கேட்ட கேள்விகளுக்கு பதிலிறுக்கும் போது, முருகனார் குறிப்பெடுத்துச் செய்யுளாக்கினார். இவர்கள் ஒரு ஒழுங்காக இருக்கவில்லை. பின்பு, இதை நூலாக்கும் போது ஒருவிதமான ஒழுங்குக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால் ஒவ்வொரு செய்யுளிலும் பெரும் புதையல் போன்ற பொருள் செறிந்திருக்கும். ஞானிகளின் உடலோடு கூடிய தோற்றத்தையே கடவுளின் வடிவம் என்று செய்யுள் 656 இல் சொல்லப்பட்டுள்ளது. அபக்குவிகளாகிய நாங்கள் இறைவனை நேரில் காண வேண்டுமாயின் பூரணம் பெற்ற ஞானிகளையே சென்று தரிசிக்க வேண்டும். ஞானியின் தோற்றம், முகப்பொலிவு, உடற் பிரகாசம், அசைவு, பேசும் மொழி போன்றவையே எமக்குக் கடவுள் தரிசனமாகும். இவர்களை வழிபடுதலால் மனம் ஒருமுகப்படும் என்றும் நிஷ்டை கைகூடுமென்றும் செய்யுள்கள் 656, 661 களில் சொல்லப்பட்டிருக்கிறது.

செய்யுள் 664 உம் ஊன்றிக் கவனிக்கப்படவேண்டிய ஒன்று. இறைவனது அருள் வழியே நடந்து செல்ல வேண்டும் என்று பகவான் குறிப்பிடுகிறார். எனக்கு முத்தி கிடைக்க வேண்டும் என்று அவாப்படுதல் அர்த்தமற்றது. நாங்கள் ஏற்கனவே முத்தி அடைந்த நிலையிலே தான் இருக்கிறோம். ஆனால் அதை மூடி மறைக்கும் தடைகளையே நாம் நீக்கவேண்டும். முத்தி என்பது இடையிலேயே அடையப்படும் ஒன்று என்பதாயின் அது இடையிலேயே கலையவும் செய்யும். நான் முத்தியடைய வில்லையே என்ற எண்ணமே நீக்கப்படவேண்டும். இந்த எண்ணமே பெருந்தடை என்று பகவான் அடிக்கடி சொல்லுவதும் நினைவில் இருக்கத்தக்கது.

(தொடரும்)

---

இறைவழிபாடு என்பது உலகம் நிலையற்றது கடவுள் ஒருவரே நிலையானவர் என்று நினைத்து வாழ்வதாகும்.

இறைவழிபாட்டின் இரண்டு கண்கள் நேர்மையும் உண்மையும் ஆகும்.

முற்பிறவியில் ஏழைகளுக்கு உணவளித்தவர்கள் இப்பிறவியில் நிறைந்த செல்வத்தை பெறுகிறார்கள்.

# அறச்சாலைகளும், தர்மசாலைகளுமான சைவாலய மடங்கள்

பேராசிரியர், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
தமிழ்ப் பேராசிரியர், மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா

சென்ற இதழ்த் தொடர்ச்சி

யாழ்ப்பாணத்து மருதனாமடம், ஓட்டுமடம், செட்டியார் மடம், கீழ் மாகாணத்தில் குருக்கள் மடம், கொந்தாச்சி மடம் முதலியனவும் மடத்துடன் தொடர்புடைய வரலாறு சொல்லும் அமைப்புகளாகும். பசுமடம், கற்பூரமடம், உப்பு மடம், ஊறுகாய் மடம் என்னும் பெயர்களில் இருந்த ஸ்தாபனங்களைப் பற்றி மகா மகோபாத்தியாயர் டாக்டர் உ.வே சாமிநாதையர் அவர்கள் நல்லுரைக் கோவையில் (பாகம்-11) எழுதியுள்ளார். 'மடம்புகு நாயென' ப்பாடும் தாயுமானவருடைய வாக்கிலும் மடம் இடம் பெறுகிறது. "மடங்கட்டி வைத்ததினாலே வசங்கெட்டுப் போன நமது நன்னாடு" என்று பாடிப் புரட்சி செய்தவர் பாரதிதாசன். ஆதிசங்கரர், வைணவர்கள், வீரசைவர்கள், சைவர்கள், ஆதீனங்கள் மடம் அமைத்துச் சமய, சமூக தர்மப்பணியாற்றினர். மொழியும், சைவமும் வைணவமும், வளர்த்தனர்.

திருப்பனந்தாள், காசிமடம், திருவாவடுதுறை மடம், காஞ்சி மடம், சிருங்கேரி, பேரூர் மடங்கள் கோப்பில் மடம், ஸ்ரீ வானமாமனல, ராமாநுஜர் மடம், எம்பெருமானார் ஜீயர் மடம் இதற்கு உதாரணமாகும். கதிர்காமம், வல்லிபுரம், கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், செல்வச்சந்நிதி, நயினாதீவு, நல்லூர், கீரிமலை போன்ற இடங்களிலும் மடங்கள் உள்ளன. கீரிமலையில் சிவபூமிமடம் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

இறைபணிக்கே தம்மை அர்ப்பணித்த திருக்கேதீச்சரம் சபாரத்தினம் சுவாமி திருகேதீச்சரத்தில் ஒரு மடம் அமைத்தார்கள்.

---

பெற்றோர்களையும் சான்றோர்களையும் வணங்குதல் வேண்டும்.

வெளி வீதியில் தென்மேற்றிசையில் தாமே அத்திவாரம் எடுத்து கால்கோள் இட்டார். பிட்டு நேர்படமண்சுமந்தவன் சிவன். சுவாமிகளும் சிவனைப் பாடிய மாணிக்கவாசகரின் திருவாசகம் நிலைக்க எண்ணி கல்லும் மண்ணும் சுமந்தார்கள். மன்னார்க்கடலால் நடந்து மடம் கட்டும் பொருள்களைச் சேர்த்துச் திருவாசக மடத்தை உருவாக்கிச் சுண்ணாம்பினால் திருவாசக மடம் என்று பெயர் எழுதினார். சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களது பக்க உதவிகளும் கிடைத்தன, இம் மடத்தையும் சுவாமிகளையும் பற்றிப் பெரும்புலவர் சதாசிவம்பிள்ளையவர்களும் வித்துவான் ஆறுமுகம் அவர்களும் பாடியுள்ளனர்.

திருவாசக மடம் மூலம் பல்வகைத்தொண்டுகளை ஆற்றலாம் என்ற உறுதி சுவாமிகளின் இறுதி நோக்கமாகும். எனவே முற்றோதல் நித்திய பாராயணம், இசைவிழா, பண்ணிசை, புராண படனம், சொற்பொழிவு, ஆய்வுரை, நூலகம், மகேஸ்வரபூசை, குருபூசை, கருத்தரங்கு, நூல் வெளியீடு, சங்கீத கதாப்பிரசங்கம் என்பவனவற்றின் மையமாக இம்மடாலயம் அமையவேண்டு மென்பதே அவர்களின் திட்டம். மடத்தை ஆக்கி அன்பர் பணி செய்பவர்களிடம் ஒப்படைத்து விட்டுத் தமது பாதையிலே இருந்தே ஆண்டாண்டாகத் தேவ கைங்கரியமும் சிவனடியார் கைங்கரியமும் திருவாசக கைங்கரியமும் புரிந்தார்கள்.

திருக்கேதீச்சர திருவாசக மடத்தை குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தில் சரவணமுத்துச் சுவாமிகளே நிர்வகித்துத் தொண்டு செய்தார். நிஷ்காமிய தர்மமாய் தன்கடமை செய்த சுவாமிகளின் உழைப்புக்கு திருவாசக மடமும் அடியார் கூட்டமும் ஒரு கலங்கரை விளக்கங்களாகும்.

திருவாசக கலாசார மண்டபத்தின் குறிக்கோள் - நோக்கம் - இலட்சியம் சுயநலமற்றது, புனிதமானது. பிறப்பிலும் இறப்பிலும் சமய வாழ்விலும் திருவாசகம் என்னும் ஞானப்பனுவலான எட்டாம் திருமுறையைப் பாடியும் நூலைக் கையில் ஏந்தியும்

---

வாழ்க்கையின் குறிக்கோள் தெய்வீகநிலை அடைவதே ஆகும்.

பரம்பொருளான சிவனைப்பற்றிய நினைவுடன் பாராயணம் செய்யும் அடியார்களது தொடர்பு உறவு, நேசம், பாசம்,அன்பு என்பனவற்றால் பிணைக்கப்பட்ட இன்ப உணர்வுடன் ஒன்று கூடும் சங்கமத் திருக்கூட்டத்தின் சேர்க்கை நிகழும் ஆன்மீகநெறிப் பீடம் என்பது ஈண்டு குறிக்கற் பாலது. ஏனையவையும் பொது நோக்கினவாயும் இந்த திருமுறைத் தொடர்பு அதிகமற்றனவாய் அதிகார வெறிபிடித்தனவாய் சைவத்தின் பெருநோக்கங்களுக்கு மாசுகற்பிப்பனவாய் அடியார்களையும் ஆன்மீக ஈடுபாடு உள்ளவர்களையும் ஏளனம்செய்து எள்ளிநகையாடுவோரது இடங்களாகவுமே தொழிற்படுகின்றன. அதிகாரத்துடன் மடங்கள் அமைவதும் நிர்வகிப்பதும் சிவத்துரோகம். சிவனை விடவும் சிவனடியார்களே சிவனடி மறவாத சிந்தையர் என்பது பெரியபுராணப் பேருண்மை. இவை சைவ சமய வரலாற்றிலே நிரூபணமான பேருண்மைகள். பணத்தாலும் படிப்பாலும் அதாவது பிரம்மாவினாலும் மகாவிஷ்ணுவினாலும் காண முடியாத சோதிப்பிளம்பே திருக்கேதீச்சரத்துச் சிவன் என்பதனை மறந்து திரிவோரது பக்தி வெறும் போலியானது. இதனை இக்கட்டுரைச் செய்திகள் உணர்த்தி நிற்கின்றன. மடங்களும் ஆதீனங்களும் கல்வியையும் ஞானத்தையும் இறையுணர்வையும் இலக்கண அறிவையும் வளர்க்க வேண்டும் என்பதுவே உயர் நோக்கு. இச் சீர்திருத்த நோக்கு ஈண்டு வலியுறுத்தப்பட வேண்டியவை. காரணம் சர்வதேச வலைப்பின்னலில் மடங்கள், ஆதீனங்கள் குறித்து இடம்பெறும் செய்திகள் சைவாசார நீதியை மறுதலிப்பன வாயுள்ளன என்பதை உலகம் அறிய வேண்டும், உணரவும் வேண்டும்.

இனி, ஈழத்துத் தபோதனர்கள் (2009) என்னும் நூலை ஆழ்கடலான் முருகவே பரமநாதன் அவர்கள் "கேடிலாத கேதீச்சரத்தில் ஈடிலாத திருவாசக மடம் அமைத்த திருவாசக சுவாமிகள்" (28-03-1904), (25-01-1988) என்னும் கட்டுரையிலே எழுதியுள்ள சில பிரதான கருத்துக்கள் வருமாறு.

---

கடந்த பிறவிகளில் ஏழைகளின் கல்விக்கு உதவியவர்கள் இப்பிறவியில் நல்ல அறிவுடன் திகழ்வார்கள்.

“பல தல யாத்திரைகளை மேற்கொண்ட ஒரு பழவடியார் நாற்பதுகளில் (1940)கோணமாமலையில் இருந்து திருக்கேதீச்சரம் வந்து சேர்ந்தார். அவரே சபாரத்தினம் என்னும் பெயரோன். இவர் இப்பதிக்கு வந்தடைந்த போது ஆலயத்தில் மூவர் கடமையில் ஈடுபட்டிருந்தார்கள். ஒருவர் அர்ச்சகர், (விப்ரர்), இனனொருவர் ஆலயக் கணக்கப் பிள்ளை. மற்றவர் பூத்தொண்டு (பண்டாரம்) செய்பவர். பாடல் பெற்ற தலத்தை நாடி ஓடி வந்த சபாரத்தினம், தான் தனக்கு ஒரு தென்னங்கீற்றுக், கொட்டில் அமைத்துக்கொண்டு அங்கேயே வசித்தார். இத்தபோதனர் பிற்காலத்தில் திருவாசக சுவாமியெனப் பெயர் பெற்றார். திருவாசகத்தை எழுதியவர் ஆழங்காட்பட்டதனால் திருவாசக மடத்தை அமைத்து சரவணமுத்துச் சாமியிடமே ஒப்படைத்தார். காரணம் திருப்பணி கருப்பனிக்கு (பிறவிக்கு வித்திடக்கூடாது) என்பது தான்.” சரவணமுத்துச்சுவாமிகள் தன் கைப்பட எழுதிய கட்டுரை இதற்குச் சான்று பகர்கின்றது.

கலாநிதி, அருட்கவி சீ. விநாசித்தம்பி “திருக்கேதீஸ்வரத்தின் சுவாமிகளின் பணி” என்று பாடிய பாடல் வருமாறு.

**“வாய்ந்திடும் திருவாசக மடத்தினை**
**ஆய்ந்திடும் பொருள் அனைத்தையும் சுமந்து வந்து**
**ஏய்ந்த வண்ணம் எழிலுறக் கட்டிவான்**
**தோய்ந்த வாசகச் சுருதி வளர்த்தனர்.”**

(ஈழத்துத் தபோதனர்கள், 2009-ப.65)

‘ஆழ்கடலான்’ முருகவே பரமநாதன் சுவாமிகளின் வரலாற்றில் (ப. 70) என எழுதும் பக்கங்கள் முக்கியமானவையாகும்.

சுவாமிகளின் வாழ்வு 84 அகவைகளைக் கொண்டது. 1904 இல் இம் மண்ணில் பிறந்தார். 1988இல் உடலம் விட்டார். 1930இல் அவருக்கு வயது 26. வாழ்வின் முக்கிய அத்தியாயம் அங்கே

---

நாம் ஏழைகளுக்கு இரக்கம் காட்டினால் இறைவர் நமக்கு கருணை காட்டுகிறார்.

துவங்குகிறது. துணைவியார் மறைந்ததும் எல்லாவற்றையும் துறந்து இறைவனைச் சிக்கெனப்பிடித்தார். சுமார் முப்பதுகளின் (1930) முற்கூற்றில் மறவன் புலோவில் சின்னத்தம்பி சுவாமிகளின் சமாதியில் சில காலம் தொண்டாற்றினார். நான் இவ்வளவு காலம் பணி செய்து எனக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே என மனம் நொந்தார். சின்னத்தம்பி சுவாமிகளின் உபதேசம் அவரை ஒரு திருவாசகச் செம்மலாக்கியது. நாவல் பதிப்பும் கையுமாய் இருந்து 656 வாசகங்களையும் மனனம் செய்து திருவாசக மயமானார். பத்து ஆண்டுகள் யாத்திரை மேற்கொண்டார். ஒருமுறை மாணிக்க கங்கையில் நீராடி சடையம்மா மடம் சென்ற வேளை ஓரன்பர் (சண்முகவடிவேலு என்ற நினைவு) காவியும் உருத்திராட்சமும் அளித்தார். அதனை அணிந்தார். அடிக்கடி கூறுவார் இந்தக் காவி வேடத்துக்கு என்னைத் தயார் பண்ண வேண்டுமென்று.

(தொடரும்)


# முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில் இருந்து நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள் இறக்குமதி செய்து விற்பனை செய்கிறோம்

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**GTA MALL, 5215 Finch Ave. E., Unit #123**

**TEL: 416-321-0285**


நம் வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொருநிகழ்வும் நமக்குப் பாடத்தைக் கற்பித்து நம்மை பக்குவப்படுத்துவதற்கே ஆகும்.

# பதினொராந்திருமுறை

பண்டிதர் மு. கந்தையா B.A.

சாஸ்திர நூல்களுக்கு ஒத்தியலும் தோத்திர நூல்களைக் கொண்டுள்ளது தமது சித்தாந்த சைவம். நமது சைவத் திருமுறைகள் பன்னிரண்டாக வழக்கிலுள்ளன. சித்தாந்த சாஸ்திர நூல்களில் முதலாகிய சிவஞானபோதமும் பன்னிரண்டு சூத்திரங்களால் அமைந்துள்ளது. அதன் ஒவ்வோர் சூத்திரமும் வரையறுக்கப்பட்ட தனியான பொருளமைதியோடு கூடியுள்ளது அன்றியும், சிவஞான போதச் சூத்திரங்கள் எண்ணொழுங்கு முறையிற் பெயர் பெற்றவாறே திருமுறைகளும் எண்ணொழுங்கு முறையிற் பெயர்பெற்றுத் திகழ்கின்றன. புறவமைப்பிற் கண்ணும் இவ் வொப்புமைப் பண்புகளுக்கு இணங்க இவற்றின் அக அமைப்பிலும் அதாவது, பொருளமைப்பிலும் நேருக்குநேர் ஒப்புமையுண்டா? இதுபற்றிஅறிஞருலகம் சிந்தித்து வருகின்றது. இந்த அறிஞர் மரபினைப் பின்பற்றிப் பதினொராந் திருமுறையின் இயல்பினைச் சிறிது கவனிப்பாம்.

**"காணும் கண்ணுக்குக் காட்டு முளம்போற்**
**காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்**
**அயரா அன்பின் அரண்கழல் செலுமே"** என்பது சிவஞான போதத்துப் பதினொராம் சூத்திரம்.

முன் பத்தாஞ் சூத்திரத்தில், 'ஏகனாகி இறைபணி நிற்றல்' என்னும் சிவத்தை அணுகும் பண்பு உணர்த்தப்பட்டது. அதன் தொடர்பாக அங்ஙனம் இறைபணி நிற்றலின் பயன் இன்னது என இச் சூத்திரத்தால் விளக்கப்படுகின்றது. ஏகனாகி இறைபணி நிற்றலின் பயன், சிவப்பேறு மூடுதலாகிய நிட்டையின் இயல்பை அடைதலாம். அது இச்சூத்திரத்தில், 'அயரா அன்பின் அரன்கழல் செலும்' என்னும் வாக்கியத்தால் இனிதுணர நிற்கின்றது. அத்துடன், அயரா அன்பின் அரன்கழல் செல்லுதற்கு இன்றியமையாத ஏதுவும் முன்னிரண்டடிகளால் விளக்கப்பட்டுள்ளது. இதன்

---

தூய எண்ணங்களால் மனிதன் தேவநிலைக்கு உயர்கின்றான்.

விரிவினை மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிய இச்சூத்திரத்தின் பொழிப்புரையிற் காணலாம்.

இறைவன் என்றென்றும் உயிருக்கு அறிவித்துத் தானும் அறிந்து நிற்குந் தன்மையன். ‘ஏகனாகி இறைபணி நிற்கும்’ நிலைபெற்ற ஓருயிர் அத்தன்மையை அறியும் வாய்ப்புள்ளதாகும். அங்ஙனம் அறியும் புது விளக்கம் பெற்ற மாத்திரத்தே அது - அயராத - மறவாத பேரன்பு நிலையைப் பெறும். அதன் பேறாக, தடையின்றி அரன்கழலிற் செல்லுதல் - நிட்டையின் இயல்பை அடைதல் - ஒன்றே அது செய்யத்தக்கது, வேறு பிறிதில்லை. குறித்த சூத்திரத்திலிருந்தும் அதன் பொழிப்புரையிலிருந்தும் நாம் உணரவருங் குறிப்புக்கள் இவையாகும்.

பதினொராஞ் சூத்திரத்தின் பொருள்நிலை இது. இனி, பதினொராந் திருமுறையின் பொருள் நிலைக்கும் இதற்குமுள்ள தொடர்பினைஅவதானிப்போம்

பதினொராந் திருமுறையில் முதலில் இடம்பெறுவது காரைக்காலம்மையாருடைய பிரபந்தப்பகுதி. அம்மையார் பெற்றிருந்த சிவானுபவநிலை எத்தகைய தென்பதைத் தெய்வச் சேக்கிழார் வாக்கில் முதலிற் காண்போம். திருக்கைலாசத்தில் தலையினால் நடந்தேறிச் சிவபெரு மானைத் தரிசித்து நிற்கும் அம்மையார், அவ்விடத்தில் விடுத்த வேண்டுகோள் பின்வருமாறு:

**“இறவாத இன்ப அன்பு**
**வேண்டிப்பின் வேண்டு கின்றார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும்**
**பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும்**
**வேண்டும்நான் மகிழ்ந்து பாடி**
**அறவாநீ ஆடும் போதுன்**
**அடியின்கீழ் இருக்க என்றார்.”**

---

எண்ணங்களை யாரும் மறைக்க முடியாது. செயலில் வெளிப்பட்டே தீரும். இதுதான் உண்மை.

இதில், 'அறவாமை வேண்டும்' என வருந்தொடர் 'அயரா அன்பின்' என்ற சூத்திரத் தொடர்க்கு விளக்கமாகிறது. 'உன்னடியின் கீழிருக்க' என்னுந் தொடர், 'அரன்கழல் செலும்' என்ற சூத்திரத் தொடர்க்கு இலக்கியமாகின்றது. இது, சேக்கிழார் காட்ட, அம்மையார் அநுபவநிலை பதினொராஞ் சூத்திரப் பொருள்நிலைக்கு ஒத்திருக்கும் அவற்றை, யாம் கண்டவாறு. மேல, அதனை அம்மையார் தம்வாக்காற் காட்ட இனிக்காண்போம்.

அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியில் இரு வெண்பாக்கள் இங்கு நம் கவனத்தை ஈர்க்கின்றன.

**"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே**
**அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற**
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர் பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்."

என்பது அவ்வெண்பாக்களில் ஒன்று. 'காண உள்ளத்தைக் கண்டுகாட்டல்' என்ற சூத்திரப் பொருள் இவ்வெண்பாவில் தானே விளங்கிக்கிடக்குந் திறம் வியற்கப்பாலதாம். இனி,

**"இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்**
**படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்**
**என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்**
**கன்பறா தென்நெஞ் சவர்க்கு."**

என்பது குறித்த வெண்பாக்களிரண்டில் ஏனையது.

"எம்மீது சிவபெருமான் எவ்வளவுதான் பாராமுகமா யிருக்கினும் இருக்கட்டும். ஆனால், நம்முடைய நெஞ்சமோ அவர்பால் அயரா அன்பு செய்துகொண்டிருக்கும் நிலையில் அணுவளவும் பிசகாது" என்பது இதன் சுருக்கமான பொருள். அயரா அன்பின் சுயரூபத்தைத் தொட்டுக் காட்ட இதனினும் மேலாக என்ன விளக்கம் வேண்டியிருக்கிறது நமக்கு!

---

இந்த உலக இயக்கம் தீயவனுக்கும் பேராசைக்காரனுக்கும் நேர்மையற்றவனுக்கும் சாதகமாக இருப்பதில்லை.

உண்மையாகவே பாராமுகம் பண்ணுங் குறிப்போடிருந் திருப்பாராகில் நிச்சயமாக வெட்கித் தலைகுனிந்திருப்பார் சிவபெருமான் இந்த அன்பின் முன்!

அம்மையாரளித்த பிரபந்தத்தின் பொருள்நிலை இவ்வாறிருக்க, இனி அடுத்து வரும் பட்டினத்தார் பிரபந்தத்தின் பொருள்நிலையைச் சற்று நோக்குவோம். தாம் 'அயரா அன்பின் அரன்கழல் சென்ற' மையைத் தாமே தம்வாக்கால் உணர்த்தி அதுபற்றி விளைந்த தமது உள்ள வெறுக்கையின் இயல்பைப் பட்டினத்தடிகள் உதிர்த்துக் கொட்டும் பகுதியொன்று அவர் பாடிய கோயில் நான்மணிமாலையில் வருகின்றது.

"ஏனோர் என்னை ஆனாது விரும்பி
நல்லன் எனினும் என்க அவரே
அல்லன் எனினும் என்க நில்லாத்
திருவொடு திளைத்துப் பெருவளஞ் சிதையாது
இன்பத் தழுந்தினும் அழுந்துக அல்லாத்
துன்பந் துதையினும் துதைக முன்பின்
இளமையொடு பழகிக் கழிமூப்புக் குறுகாது
என்றும் இருக்கினும் இருக்கவன்றி
இன்றே இறக்கினும் இறக்க வொன்றினும்
**வேண்டலும் இலனே வெறுத்தலும் இலனே**
(இதுவெல்லாம் விளைந்தது எப்படி எனில்)
ஆண்டகைக் குரிசில் நின் அடியரொடு குழுமித்
தெய்வக் கூத்தும்நின் செய்ய பாதமும்
அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வங் கிடைத்த லானே."

என்பது அவர் பாடற்பகுதி. ஒரு துறவுள்ளத்தில் வேண்டாமை வீறு எங்ஙனங் கொலுவிருக்கும் என்பதற்கு இனியதோர் எடுத்துக்காட்டு இது.

---

பெருந்தன்மை நல் ஒழுக்கம் மற்றும் புனிதமான எண்ணங்களை உடையவருக்கே உலகம் உதவுகிறது.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றார் திருவள்ளுவர். இவர் அம்மையாரை அகக்கண்ணாற் கண்டுகொண்டுதான் சொல்லுகின்றாரோ என எண்ணத் தோன்றுகின்றது அதனருமை. இனி, அப்பிறவாமை எதனாற் சம்பவிக்குமெனில், 'அது வேண்டாமை வேண்டவரும்' என்கின்றார், இவ்வாக்கியத்தால் திருவள்ளுவர் பட்டினத்தடிகளின் மன நிலையையே தொட்டு உணர்த்துகின்றார் போலிருக்கின்றது. ஆனால், 'வேண்டாமை வேண்டுதல்' என்பது சும்மா வந்துவிடுமா? எந்த ஒரு அநுபவச் சூழ்நிலையில் அநுபவிக்கும்? திருவள்ளுவர் உய்த்துணர வைத்து விட்டார். பட்டினத்தார் வெட்ட வெளிச்சமாக விளக்கியே விட்டார்.

**"தெய்வக் கூத்தும்நின் செய்ய பாதமும்**
**அடையவும் அணுகவும் பெற்ற**
**கிடையாச் செல்வம் கிடைத்த லானே"**

என, 'பாதம் அடையவும் அணுகவும் பெறுதல்' - பதினொராந் திருமுறைப் பட்டினத்தார் வாக்கு. அயரா அன்பின் அரன்கழல் - பதினொராம் சூத்திரப் பகுதி.

அரன்கழல் சார்ந்தமையால், 'வேண்டும வீறு' பெற்ற அம்மை யார் நிலை அது. அதனால், 'வேண்டாமைவீறு' பெற்ற அடிகள் நிலைஇது. இவை இவ்வாறாக இனி, இத்திருமுறையின் நடுநாயகமாய் விளங்கும் திருமுருகாற்றுப்படையின் பொருளியல்பைக் கவனிப்போம். இதன் ஆசிரியராகிய நக்கீர தேவநாயனார் இதன்கண், சீவன்முத்தனாகிய ஒருவனை முருகப்பெருமானிடம் முத்தியின்பம் பெறுதற்கு ஆற்றுப்படுத்து கின்றார்.அவ்வகையில், அவ்வின்பப் பேற்றுக்கு இன்றியமையாத தகுதிப்பாடு அவன்பாலுண்மையைச் சில அடிகளில் தெரிவிக்கின்றார்.

**'எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்**
**சேவடி படகுஞ் செம்ம லுள்ளமொடு**
**நலம்புரி கொள்கைப் புலம்புரிந்துறையும்**
**செலவு'**

என்பது அப்பகுதி

சுப்பிரமணிய சுவாமியினுடைய திருவடிகளையே சிந்திக்கும் தலைமை பெற்ற உள்ளத்துடனே புண்ணியங்களை விடாது செய்யுங் கோட்பாட்டினாலே விளையாநின்ற மெய்ஞ்ஞானத்தைச் சாதித்து, அத்திருவடிக்கீழ் இருக்கும் நெறி என்பது நாவலர் பெருமான் அதற்கு வரைந்த உரை இப் பாடற் பகுதியும் இவ்வுரைப்பகுதியும் தாம் வேண்டும் முடிவிற்கே முற்றிலும் ஒத்தியல்கின்றன.

'ஒருபானை சோற்றுக்கு ஓரவிழ் பதம்' என்பது பெருவழக்கு. பதினொராம் திருமுறை பதினொராஞ் சூத்திரப் பொருண்மைக்கொத்துள்ளது எனக்காட்ட இச்சில உதாரணங்கள் போதுமானவை.

இத்தகைய இப் பதினொராந் திருமுறை தன் பாடல்களின் தன்மையாலும், கவிதைநயம் பொருள்நயம் சொல்நயம் ஆகியவற்றாலும் சங்கவிலக்கிய ரீதிக்குஞ்சரி, சமயவிலக்கிய ரீதிக்குஞ்சரி, சற்றும் இளைக்காத பெருமையுடையது. பிற்காலத்துப் பெருஞான மேதைகளாகிய குமரகுருபர சுவாமிகள், சிவஞான சுவாமிகள் போன்றோர் அருளிய பிரபந்தங்களின் நடைக்கெம்பீரத்திலும், பொருள்நயச் செவ்வியிலும், கவிதா சாமர்த்திய வீற்றிலும் இப்பிரபந்தம் நிழலாடுவதை இலக்கியக் கண்ணால் இனிது கண்டு இன்புறலாம். அன்றியும், முன்னைய திருமுறைகளில் அருகித் தோன்றும் விநாயக பரத்துவச் சிறப்பு இதன்கண் பரக்கச் செழிக்க இடம்பெற்றுள்ளது. திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாருக்கு இது இன்றியமையாத ஒரு மூலநூலாக நின்றுதவியிருக்கிறது. இதன் கண்ணுள்ள, நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி பெரியபுராண விரிவுக்கு வகைநூலாக உதவியுள்ளது. அவர்தம் ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, திருவந்தாதி என்பனவும் பட்டினத்தடிகளின் திருக்கழுமல மும்மணிக் கோவையும் திருஞானசம்பந்தர் பற்றிய செய்திகள் பலவற்றைச் செழிப்பாக அள்ளித்தந்துள்ளன. இன்னும், கண்ணப்பர், சாக்கியர்,

---

கோபம் பகையை வளர்க்கும். போட்டி ஆணவத்தை வளர்க்கும். ஆணவம் பிடிவாதத்தை வளர்க்கும்.

சண்டீசர் வரலாற்றின் உயிர்த்தத்துவமான கருத்துக்களும் இப்பிரபந்தமே தாயகமாய்த் திகழ்கின்றது..

கல்லாலெறிதல் முத்திசாதனமாவ தெப்படி என்பது எவர்க்குமே புரியாத புதிராகும். 'கல்லா லெறிந்த பொல்லாப் புத்தன் நின்னினைந் தெறிந்த அதனால் - அன்னவன் தனக்கும் அருள் பிழைத்தின்றே' என இப் பிரபந்தம் இப்புதிருக்கு ஒரு சூசகம் பண்ணிவிட, இதன் வழியுணர்ந்தே சேக்கிழார்,

**அன்றுபோய்ப் பிற்றைநாள் அந்நியதிக் கணையுங்கால்**
**கொன்றைமுடி யார்மேற்றாங் கல்லெறிந்த குறிப்பதனை**
**நின்றுணர்வார் எனக்கப்போ திதுநிகழ்ந்தது அவரருளே**
**என்றதுவே தொண்டாக வென்றுமது செயநினைந்தார்'**

என்று, அப்புதிரை அழகாக அவிழ்த்துக் காட்டியுள்ளார்.

'கடுகு சிறிதெனினுங் காரம் பெரி' தென்பர். அளவிற் சிறிதாயினும் இத்திருமுறையின் விறலுஞ் செறிவும் மிகமேலானவை. இதன் பண்பும் பயனுஞ் சைவத்திற்கு என்றைக்கும் இன்றியமையாதவை யெனலாம்.

(நன்றி: 1967 ஆம் ஆண்டு காரைநகர் சைவமாசபை பொன்விழா மலர்)

---

## ஆத்மஜோதி வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

ஆத்மஜோதி அன்பர்களே

ஆத்மஜோதி காலாண்டு இதழானது 3000 பிரதிகள்படி ஆண்டுக்கு 12000 மலர்கள் இலவசமாக தபாலிலும், நேரடியாகவும், வியாபார நிலையங்களிலும் ஆலயங்களிலும் விநியோகம் செய்யப்பட்டு தங்கள் கரங்களில் தவழுகின்றது.

65 வருடங்களுக்கு மேலாக தடையின்றி வெளிவரும் ஆன்மீக இதழ் கனடாவிலிருந்து தொடர்ந்து வெளிவருவது ஈழமக்களின் ஆன்மீகப் பற்றுக்கு நல்லதொரு சான்று. இப் பெருமை வாய்ந்த 'ஆத்மஜோதி' க்கு தபால் செலவு உட்பட இதர செலவுகளும் உண்டு.

அருட்செல்வம் நிறைந்த 'ஆத்மஜோதி' பொருட் செல்வம் குறைந்த நிலைகண்டு மனம் கலங்குகிறோம்.

44 ஆம் பக்கம் பார்க்க

# உறக்கத்திலும் உன்நினைவு

ஆத்மஜோதி நா. முத்தையா

உறக்கம் நல்லது. நல்ல உறக்கம் மிக நல்லது. வாழ்நாள் முழுவதும் உறங்கினால் அது வீணாளாகும். கும்பகர்ணன் வாழ்க்கை அதற்குச் சாட்சி. அளவோடு உறங்கினால் உடலுக்கு நல்லது. உள்ளத் தெளிவு உண்டாகும். தகுந்த உறக்கம் இல்லாவிடில் உடல் சோர்வு, உள்ளத்தில் மயக்கம் என்பன உண்டாகும். நல்ல உறக்கத்திற்காக வைத்தியரை நாடுவோர் பலர். தன் உள்ளத்தைத் தன்னிடத்திலே வைத்திருப்பவன் உறக்கத்திற்காக வைத்தியரை நாடவேண்டியதில்லை.

நல்ல உறக்கத்தில் உடலும் உள்ளமும் புத்துணர்வு பெறுகின்றன. கனவிலே புலன்கள் அனைத்தும் ஒய்வு பெறுகின்றன. ஆனால் மனம் மட்டும் செயல் புரிகிறது. கனவுலகம் நினைவுலகத்தைவிட வேறானது. யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டுத் திண்ணையில் உறங்கும் மனிதன், படுக்கச் செல்லும் பொழுது நல்ல திட ஆரோக்கியமாக விளங்கியவன், கொழும்பில் நோயாளியாக அலைந்து திரிகிறான். பரீடசை வினாப் பத்திரத்திற்குத் தகுந்த விடை எழுதியவன் பரீட்சையில் சித்தியடையாது துக்கப் படுகிறான்.

இவனுக்கும் கனவுக்கும் எவ்வளவுதான் தொடர்பற்றதாயிருப்பினும் கனவு காணும்வரை அது உண்மையெனக் கனவு காண்கின்றவன் உணர்கிறான். ஆதலினாலேதான் மனிதன் கனவிலே இன்ப துன்ப உணர்ச்சிகளுக் காளாகின்றான். உடல் தேவைகளைப் பூர்த்தி செய்தலிலும், உடலுணர்ச்சிகளைத் திருப்தி செய்தலிலும் காணுங் கனவுகள் உயிர்த் தேவையைப் பூர்த்தி செய்வதாகவோ, திருப்தி செய்வதாகவோ மாறிவிட்டால், அத்தகையோர் பாக்கியசாலிகளாவார்கள்.

---

பொறாமை வஞ்சத்தை வளர்க்கும். வெறுப்புத் துன்பத்தை வளர்க்கும்.சிவபக்தி இன்பத்தை வளர்க்கும்.

வள்ளலார் இறைவனை நினைந்து நினைத்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து வழிபட்டவர். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வழிபாடு செய்தவர். வான் கலந்த மாணிக்க வாசகரின் உள்ளமுருகும் தெய்வப்பாடல்களை உயிர் கலந்து உவட்டாமல் அநுபவித்தவர். அத்தகையவர் ஒரு இடத்திலே முருகனை வேண்டுதல் செய்யும்போது,

"கனவிலேனும் காட்டென்றால் காட்டுகிலாய்"

என்று ஏங்குகின்றார். நானோ பண்ணோடு பாடத் தெரியாதவன். எனக்கு முன்னே வந்த எத்தனையோ பக்தர்கள் நின்னுடைய பாதமலர் அழகினைப் பற்றிப் பலப்பல விதமாகப் பாடி விட்டார்கள். அதனைக் கற்பனை செய்யுந் திறந்தானும் எனக்கு இல்லையே. பாவியாகிய யான் பார்த்தால் கண்ணூறு பட்டுவிமோ? இதற்கு முன்னுள்ளோரெல்லாம் பார்த்துப் பார்த்துப் கண்ணூறடையாத திருப்பாதம் எனது கண்ணால் மாத்திரம் ஊறுபட்டு விடுமா? அங்ஙனம் பாவியேனுடைய கண் ஊறு விளைவிப்பதானால் நின் திருப்பாதத்தைக் கனவிலே காட்டி. மறைக்கலாகாதா? நினைவிலே காணும் போதுதான் கண்ணூறு படுவதைப் பார்க்கின்றோம். கனவிலே கண்டு கண்ணூறு பட்டதை உலகில் கேள்விப்படவில்லை. ஆகவே நினது திருப்பாதத்தை ஒரு முறையாகிலும் கனவிலே காட்ட மாட்டாயா? என்று ஏங்குகின்றார்.

நினைவிலே உறுதியாகப் பற்றினால்தானே கனவிலே தோற்றும். ஒருமுறை ஒரு பக்தர் தன்னைத்தானே சோதித்துக் கொண்டார். தான் நன்றாகத் தூங்கும்போது நல்ல பிரம்பெடுத்து ஓங்கி ஒரு அடி அடிக்க வேண்டுமென்று தனது சிஷ்யனிடம் கூறியிருந்தார். சிஷ்யனோ முதலில் அதற்குச் சம்மதிக்காதவனாயினும் ஈற்றில் ஒருவாறு சம்மதித்தான்- ஒருநாள் மத்தியானம் பக்தர் நன்கு சாப்பிட்டுவிட்டு ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார். அத்தகைய நேரத்தைச் சிஷ்யன் தனது கடமையை

---

பிறரை வெற்றி கொள்பவன் உடல்வலிமை உடையவன். தன்னை வெற்றி கொள்பவன் தெய்வபலம் உடையவன்.

நிறைவேற்றப் பயன் படுத்திக் கொண்டான். சிஷ்யனினபிரம்படி பக்தரின் முதுகில் விழவும் ஐயோ என்று அலறிக் கொண்டு எழுந்தார் பக்தர். சிஷ்யனும் மிரள மிரள விழித்தான். பக்தர் "அப்பா நீ அடித்தது காணாது, மேலும் மேலும் அடி" என்று கட்டளையிட்டார். முதுகைக் காட்டினார். தானே பிரம்பை வாங்கித் தனக்கே அடித்துக் கொண்டார். சிஷ்யனுக்கு முதலில் விஷயம் தெளிவாகவில்லை. 'அப்பா நான் என்னை இன்றுவரை கடவுள் பக்தன் என்று பலரறியச் சொல்லி வந்துள்ளேன். அவை எல்லாம் வெறும் பொய் என்று அறிந்து கொண்டேன். நான் ஆண்டவனை ஏமாற்றி விட்டேன். என்னையும் ஏமாற்றிக் கொணடேன். அடி விழுந்ததும் ஆண்டவன் நாமத்தையல்லவா சொல்லிக் கொண்டு எழுந்திருக்க வேண்டும். அந்தப் பழக்கம் என்னிடம் இன்னும் வரவில்லை.

"காலையிலே மாலையிலே வழிபாடு செய்கிறேன். மத்தியானமும் நினைக்கின்றேன் நினைவு வரும்போதெல்லாம் நினைக்கின்றேன்.கோயில் செல்கின்றேன். கோயிலைக் காணும்போது நினைக் கின்றேன். உலகப் பொருட்களில் மனம் ஈடுபடும்போது உன்னை மறந்து விடுகின்றேன். இதனை உலகோர் அறியார். அவர்கள் எல்லோரும் என்னைப் பக்தன் என்று பெயர் சூட்டினர். நானோ உறக்கத்தில்கூட உன் நினைவு அற்றவனாகி விடடேனே. ஆதலால் அடிக்குமேல் அடி அடித்து என்னைத் திருத்து என்று வேண்டிக் கொண்டார் பக்தர்.

நினைவுக்கலை மிகவும் முக்கியமானது. அக்கலை ஆண்டவனை அடையும் முயற்சியில் வெற்றியை ஆக்குகின்றது. மறதி உடையவன் முயற்சிகளில் தோல்வியையே காண்கின்றான். நல்ல நினைவையுடையவன் தன் முயற்சிகளில் எல்லாம் வெற்றியையே காண்கின்றான். ஞாபக சக்தியுள்ள மாணவன்தான் பரீட்சையிலே தேறுகின்றான். எமது ஆத்ம சித்திக்கும் இது மிகப் பொருத்தமானது. மனோ வியாபாரங்களில் பெரும் பகுதி

---

வாழ்க்கையைத் தொண்டாக்கி தொண்டே இறைவழிபாடு என வாழ்ந்துகாட்டியவர்கள் எமது நாயன்மார்கள்.

சித்தத்திலேயே நடைபெறுகின்றன. ஓடித்திரியும் மனம் சற்றே ஓய்வு பெறுகிறது. ஆனால் சித்தம் 24 மணி நேரமும் வேலை செய்து கொண்டே இருக்கிறது. முன்னிரவு முழுவதும் ஒரு கணக்கிற்கு விடை கண்டு பிடிக்க முடியாத மாணவன் அதிகாலையில் வெகு இலகுவாகக் கண்டு பிடித்து விடுகின்றான். இதனைச் செய்து வைத்தது சித்தமே. ஆண்டவன் நாமத்தை ஜெபம் செய்யும் போதும் பஜனை செய்யும் போதும் சித்தமே அவற்றைப் பதிவு செய்து கொள்ளுகின்றது. தீய சம்ஸ்காரங்களையும் பதிவு செய்வது அதுவே. நல்ல நினைவுகளைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்து விட்டால் சித்தமே நம்பிக்கையான நண்பனும் உத்தமமான குருநாதனுமாகும்.

**"சித்தமிசை குடிகொண்ட அறிவான பரதெய்வமே"**

என்பது தாயுமானவர் வாக்கு. நனவிலே சித்தம் தெளிவடைந்தால் உறக்கத்திலும் தெளிவாகத் தொழிலாற்றுகின்றது. 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்பது பழகி வந்த பழமொழி. சித்தம் எமக்கு அடிபணிந்து கருமமாற்றுகின்றது. படுக்கைக்குச் செல்லுமுன் சித்தத்தினிடம் இட்ட கட்டளையை அது சிரமேற்றாங்கி உறங்கி விழிக்கும் நேரம் விடையைத் தயாராக வைத்துக் கொண்டு அது காத்து நிற்கும். நித்திரைக்குப் போகுமுன் இறைவனைத் தியானம் செய்து, நூற்றெட்டுத் தரமாயினும் நாம ஜெபம் செய்து சென்றால் அதிகாலை எழும்பும்போது சித்தம் இறை வழிபாட்டுக்கு ஆயத்தமாக நிற்கிறது. வாழ்க்கையில் சிக்கலான பிரச்சினைகளில் ஈடுபடுபவர்களும் தமது பிரச்சினைகளில் ஈடுபடுபவர்களும் தமது பிரச்சினையைச் சித்தத்திடம் விட்டுவிடாமால் அவற்றுக்கும் ஒரு சுமூகமாக முடிவைக் கண்டு வைக்கின்றது சித்தம்.

'நற்றவா உனைநான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்பதில் நான் என்பது மனம். மறதிக்குக் காரண கர்த்தா மனம். நாவுக்குத் தனியாக ஒரு தொழில் இல்லை.

---

பகையை பகைமையால் வெல்லமுடியாது.

நா கருவியை தவிர கர்த்தா அல்ல. கருவியை இயக்குவது சித்தம். உறக்கத்திலும் ஜெபம் நிகழ்ந்து கொண்டிருக்குமானால் அது சித்தத்தின் செயலே. ஐந்து எழுத்தாலாய மந்திர ஜெபத்தைச் செய்யும் ஒருவன் ஐந்து கோடி நாம ஜெபம் செய்யும்போது அவனுக்கு மந்திரத்திற்குரிய தேவதை பிரத்தியயட்சமாகிறது என்பது பண்டைப் பெரியோரின் அனுபவமாகும். அத்தகைய நாம ஜெபத்தின் பெரும் பகுதி உறக்கத்திலும் நடந்தால்தான் இவனது இலட்சியம் இலகுவில் நிறைவேறுகின்றது.

'ஆத்மனின் இன்பம் துய்த்து, ஆத்மனில் விளையாடி, இன்னும் ஆத்மனில் உள்ளொளி காணும் யோகி தானே பிரம்மமாகி பிரம்ம நிர்வாணத்தை அடைகிறான்' என்பது கீதா வாக்கியமாகும். மிக மிக உயரிய ஆத்மீக அறிவுதான் 'தன்னறிவு' என்பது. 'தவஞ் செய்வார், தங்கருமஞ் செய்வார்' என்பது வள்ளுவர் வாக்கு. பல கண்டு பிடிப்புகள் கனவிலே கண்டு பிடிக்கப்பட்டவை. ஆத்ம சித்திகளும் அங்ஙனம் அடையப் பெற்றவை பல உள. உள்ளும் புறமும் உறக்கத்திலும் விழிப்பிலும் எல்லா நிலையிலும் இறைவனை மாத்திரம் கண்டு கொண்டு மற்றவை எல்லாவற்றையும் மறந்திருக்கும் நிலையே இறை வனுடன் எமக்கிருக்கும் ஈடுபாட்டினைக் காட்டுவதொன்றாகும்.

**'துஞ்சும் போதுந் தூற்றும் போதுஞ் சொல்லுவனுன் திறமே'**

என்பது சம்பந்தர் வாக்கு. நித்திரையிலே ஏதாவது சொன்னால் அது உன் நாமமே. படைக்கலமாக உனது நாமத்து அஞ்செழுத்தையும் கொண்டேன். சாப்பிடும் போது உனது நினைவேயல்லாமல் உணவைப்பற்றி நினைப்பதில்லை. நல்ல உணவு கிடைக்கும்போது அதன் ருசியில் மனிதன் திளைத்து விடுகின்றானே தவிர அவ்வுணவுக்கு மூல கர்த்தாவான இறைவனை மறந்து விடுகின்றான். நல்ல பட்டினியாக இருக்கும் போது எப்போ சாப்பிடுவேன் என்ற எண்ணமே தவிர இறைவனை மறந்து விடுகின்றான். நோயாய்ப் படுத்து இருக்கும்போது கூட

---

எண்ணங்கள் தான் குணங்களாக அமைகின்றன.

நோயின் நினைவே தவிர ஆண்டவனை மறந்து விடுகின்றான். ஆண்டவனை நினைந்திருக்கும் அளவுக்கு மறக்கும் நிலையை ஏற்படுத்திக் கொள்வதில்லை. நித்திரையிலும் உணவின் போதும் உன்னையே ஏன் சொல்லுகின்றேனென்றால், காப்பார் ஒருவருமற்ற தேவர்கள் வந்து உன் தாளினைப் பணிந்த போது அவர்கள் உயிரைக் காப்பதற்காக நஞ்சையுண்ட கருணை யாளன் அல்லவா நீ. உன் கருணையை நினைக்கும்போது நித்திரையிலே கூட உன்னாமமே முன்வந்து நிற்கின்றது. ஆண்டவனுடைய புகழைப் பாடுதலும் அவன் பெருமை கூறக் கேட்டலும் அவன் நினைவை மறவாதிருத் தற்காகவே.

இன்னோரிடத்தில் சம்பந்தப் பெருமான்

**'நனவினுங் கனவினும் நம்பாவுன்னை**
**மனவினும் வழிபடல் மறவேனம்மான்'**

மனவு என்பது அக்குமணி. அதாவது உருத்திராக்க மணியாகும். மனதை ஒருமைப் படுத்துவதற்கு ஜெபம் செய்வது வழக்கமாகும். அந்த ஜெபமும் ஒழுங்காய் நடைபெறுவதற்கு ஜெபமாலை அதாவது உருத்திராக்க மாலை துணை புரிகின்றது. உருத்திராக்கம் மூலம் ஜெபமும் ஜெபத்தின் மூலம் மன ஒருமையும் ஆத்ம சக்தியும் உண்டாகின்றன.

எல்லாவற்றையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்து விட்டால் நான் எனது என்பதற்கே இடமில்லை. நான் எனது என்னும் அகங்கார மமகாரங்களே மனிதனை மிருகமாக்குகின்றன. தனக்குக் கிடைப்பன எல்லாம் இறைவன் உடைமையே என்னும் எண்ணம் உண்டானால் துன்பத்திற்கோ இன்பத்திற்கோ இடமில்லை. நல்ல உணவு கிடைத்தால் மகிழ்ச்சியும் நல்ல பசி உண்டானால் துன்பமும் அடைதல் சாதாரண மனித இயல்பு. இரண்டையும் ஒன்றாக நோக்குபவன் யாரோ அவனே மகாத்மா.

---

முழுமுதற்கடவுளான சிவபெருமானை மட்டும் புகழ்ந்துரைக்கும் பாடல்களே திருமுறைகளாகும்.

இதற்கு வழி எல்லாம் இறைவன் செயல் என நடத்தலே. கஞ்சன்காடு சுவாமி இராமதாசரும் சாது இராமனும் யாத்திரை செய்யும்போது ஒரு இடத்திலே றெயில்வே ரிக்கெற் இல்லாமையால் இருவரையும் கீழே இறக்கி விட்டார் ரிக்கெற் பரிசோதகர். இறக்கி விட்டதோடமையாது இருவரைக் கொண்டும் தோப்புக் கரணம் போடச் செய்தார். சாது ராமனுக்குக் கோபம் கோபமாக வந்தது. இராம தாசரோ அதுவும் இறைவன் இச்சை என்று அமைதியாய் இருந்தார். நெடுந் தூரம் பிரயாணம் செய்து வந்ததில் கால்களில் இரத்தோட்டம் இல்லாது போனது. அதில் இரத்தோட்டம் உண்டாக்குதற்காகவே எல்லாம் வல்ல இராமன் இந் நிகழ்ச்சியை உண்டாக்கினான் என்பது இராமதாசருடைய கொள்கையாகும். சாதுராமனுக்கு இதனை உணர்ந்து கொள்ளும் ஆற்றலே இல்லை. சம்பந்தப் பெருமான் இன்னோரிடத்தில்

**"உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்**
**ஒண்மல ரடியலா லுரையாதென் நா."**

என்று தெளிவுபெறக் கூறுகின்றார். "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்பது போல நனவிலும் கனவிலும் அவனாக வந்து காட்டினாலல்லவா என்னால் காண முடியும்! நான் கண்டேன் என்று சொன்னாலே ஆணவம் முன்னுக்கு வந்து விடுகின்றது. அவனாகவே விரும்பி அவனைக் காட்டாவிட்டால் யார்தான் காணமுடியும்? இதனையே சம்பந்தப் பெருமான்

**"நனவிலுங் கனவிலு நாளுந் நன்னொளி**
**நினைவிலு மெனக்கு வந்தெய்து நின்மலன்"**

என்று வியக்கிறார்.

ஒருநாள் நாவுக்கரசுப் பெருமானுக்குச் சிவபிரானிடமிருந்து அழைப்பு வந்தது. திருவாய்மூருக்கு வா என்பதுதான் அந்த

---

பல பிறவிகளில் தவம் செய்த ஆன்மாக்கள் தான் இப்பிறவியில் திருமுறைகளை ஓதும் வாய்ப்பினைப் பெறுவார்கள்.

அழைப்பாகும். நினைந்து நினைந்து உறங்குவாராம். அந் நினைவிலே இறைவனார் வந்து வா என்று சொன்னாராம். நான் எங்கே இருக்கின்றேனோ அங்கே தேடி வந்து அடையாளம் அருளினார்.

**"உன்னி யுன்னி உறங்குகின்றே னுக்குத்**
**தன்னை வாய் மூர்த்தலை வனாமா சொல்லி**
**என்னை வாவென்று போனா ரதென்கொலோ"**

என்பது திருநாவுக்கரசர் வாக்காகும். இன்னோரிடத்தில் "ஒற்றியூர் மேய ஒளிவண்ணனார் கண்டேன் நான் கனவகத்தில்" என்கின்றார்.

கடலையும் விட ஆழ்ந்து அகன்றது நமது மனம். இதன் பரப்பையும் ஆற்றலையும் பண்டைப் பழங்காலத்திலேயே நமது பெரியவர்கள் நுணுகி ஆராய்ந்து அறிந்திருந்தனர். அலை பாய்ந்து கொண்டிருக்கும் நமது மனம் ஒன்றைநோக்கிஒருமுகப் படும்பொழுது எத்தகைய பேராற்றல் பிறக்கிறது என்பதும் அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. மனத்தின் கொந்தளிப்பை அடக்குவதே யோகம் என்கிறார் பதஞ்சலி பகவான். அவ்வாறு அடக்கித் தெளிந்த மன நிலையிலேதான் பரமாத்ம சொரூபம் புலனாகிறது. அந்த நிலைக்கு நாம் உயரும்போதுதான் உறக்கத்திலும் எந்நிலையிலும் மனம் இறைவனிடத்து இருக்கும்.

**"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்"**

என்று கூறுவதற்கு எத்தகைய சாதனை வேண்டும். அத்தகைய சாதனையே தெய்வீக வாழ்வாகும். அவ்வழிநின்றால் பிறந்ததன் பயனைப் பெறலாம்.

இனபமே சூழ்க; எல்லோரும் வாழ்க.

---

பிறரை புரிந்து கொள்பவன் புத்திசாலி. தன்னை அறிந்து கொள்பவன் ஞானி.

திருமுறைப்பாடல்களை உள்ளம் ஒன்றிப்பாடினால் இறையருள் எளிதில் கிடைக்கும்.

# ஆத்மீகவள்ளலின் ஆத்மீகப்பணிகள்

சிவ. முத்துலிங்கம்

பூவுலகத்தை ஆளும் மகாசக்திவாய்ந்த பரம்பொருளாகிய இறைவன் இவ்உலகினில் சகலஉயிரினங்களையும் படைத்துக் காத்து அழித்தும் வருகின்றார்.இவ் உலகை வழிப்படுத்த காலத்திற்கு காலம் ஞானிகள் மகான்கள் சித்தர்களை பிறக்க வைக்கின்றார்.

அவர்கள் மக்களை நல்வழிப்படுத்தி வாழ்க்கை நிலையாமையை உணர்த்தி மக்களை நன்நெறிப்படுத்துகிறார்கள் மனிதசமுதாயத்திற்கு இடையில் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் மகான்களின் நோக்கம். அவர்கள் தங்கள் அருளாற்றலால் மக்களின் வாழ்வில் பிரகாசத்தை ஏற்படுத்துகிறார்கள்.

ஞானிகளின் உபதேசங்களினால் மக்கள் மேன்மை அடைகின்றார்கள். அவர்களிடையே ஆத்மீக விழிப்புணர்வு ஏற்படுகின்றது. அன்பும் கருணையும் பக்தியும் பெருகுகின்றது. எமது சனாதன தர்மம் இந்து தர்மம் பேணப்படுவது மகான்கள் ஞானிகள் சித்தர்கள் ஆகியோரின் அருள் சக்தியினால் தான். அவர்கள்தான் எமது சமயத்தை தாங்கி நிற்கும் தூண்கள்

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போதுஆண்டவன் அவர்கள் செய்யவேண்டியகாரியங்களை அவர்களின் தலையில் எழுதிவிடுகின்றார்.

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் பிறக்கும்பொழுதே கருவிலே திருவுடைய பெரியார் ஆவார் துறவு அவரின் போனபிறப்பிலே குடிகொண்டது எனலாம். நைட்டிகப் பிரமச்சாரியான பெரியார் தன்வாழ்நாள்முழுவதும் சான்றோர் போற்றும் பிரமச்சாரியாகவே வாழ்ந்தார்.ஆசிரியத்தொழிலை மேற்கொணட ஐயா அவர்கள் 1939ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டுவரை 44 ஆண்டுகள் மலையக நகரமாகிய நாவலப்பிட்டியில் வாழ்ந்து வந்தார்.36 ஆண்டு காலம் ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட ஐயா அவர்கள் கல்வியுடன்

---

தீயை தீயினால் அணைக்க முடியாது.

ஒழுக்கத்தையும் பண்பாடு கலாச்சார விழுமியங்களையும் மாணவர்களிடையே புகட்டினார். பல வருடங்கள் பாடசாலை அதிபராக இருந்தமையால் தன் குறிக்கோளை நிறைவேற்றிப் பல ஆயிரம் மலையக மாணவர்களுக்கு விடிவெள்ளியாகத் திகழ்ந்தவர். பாமர மக்களாகிய மலையக மக்களிடையே அவர் ஏற்றிவைத்த சுடர் இன்றும் மூலை முடக்கெலாம்பரவி சுவாலையாக பிரகாசிக்கின்றது.

ஐயா அவர்கள் மலையக மலைகளில் ஏறி மலையகத் தொழிலாளர்களின் குடிமனைகளுக்குச் சென்று ஆத்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன் ஒழுக்கத்தையும் சுகாதாரத்தையும் போதித்தார். சுகாதார கருத்தரங்கம் நடத்துவதற்காக பிரபல எழுத்தாளரும் சமூகசேவேயாளருமாகிய டாக்டர் நந்தி அவர்களை வாரம் தோறும் தோட்டத் தொழிலாளர்களை நாடி அழைத்துச் சென்றார்.

*1948*ஆம் ஆண்டு தொடக்கம் ஆத்மஜோதி சஞ்சிகையை இல்லற ஞானி திரு க. இராமச்சந்திராவுடன் இணைந்து *1983*ஆம் ஆண்டு யூலை மாதம் இனக்கலவரம் ஏற்படும் வரை *35*வருடங்கள் நடாத்தி வந்தார்.ஆத்ம ஜோதி இலங்கை இந்தியா மலேசியா சிங்கப்பூர் இந்தோநேசியா போன்றநாடுகளில்சந்தாக்காரர்களை கொண்ட சஞ்சிகையாக இருந்தது. *1991*ஆம் ஆண்டுதொடக்கம் அவர் வழிவந்தவர்களினால்ஆத்மஜோதி கனடாவில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

வீட்டுப்பிரார்த்தனை கூட்டுப்பிரார்த்தனை ஆத்மீகசற்சங்கம் பாதயாத்திரை போன்றவற்றாலும் மக்களுக்குமத்தியில் ஆத்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.அவருடைய சொற்பொழிவு களினால் பலன்அடைந்தோர் பல ஆயிரம் பேர்கள். அவருடைய உபதேசங்களினால் நல்வாழ்வு வாழ்பவர்கள் பல ஆயிரம்பேர்கள்.

அவரின் நயன ஸ்பரிச வாக்குத் தீடசைகளினால் சீடர்கள் ஆகியோர் பலர்.. இந்தோனேசியாவில் இரணடுவருடங்கள் தங்கியிருந்து ஆத்மீகப்பணிகளைச் செய்தார். *1994 1995* இல் கனடா சுவிஸ் போன்ற நாடுகளுக்குச் சென்று தன் பணிகளை தொடர்ந்தார்.

---

தீயஎண்ணங்களால் மனிதன் மிருகநிலைக்கு கீழே போகின்றான்.

1994 ஆம்ஆண்டு கனடாவில் இந்துசமயப்பேரவையை ஆரம்பித்தார். 1995 ஆம் ஆண்டு கனடா மொன்றியலில் ஆத்மஜோதி கல்வி இணையத்தை ஆரம்பித்தார்.ஆறுமாதம் கனடாவில் ரொரன்ரோவிலும் மொன்றியலிலும் தங்கியிருந்து பல ஆத்மீகப்பணிகளை செய்து கொண்டிருந்த பொழுது மொன்றியலில் இறைவனடி சேர்ந்தார்.

இந்துசமயப்பேரவையினர் அவரின் பூதவுடலை பொறுப் பேற்று சிறப்பான முறையில் ரொரன்ரோவில் அவரின் இறுதி நிகழ்வுகளை நிறைவேற்றினர் ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

(அளப்பரிய சக்தி வாய்ந்த மகான்னான ஆத்மஜோதி சுவாமிகளின் பிறந்த நூற்றாண்டுவிழா 2018ஆம் ஆண்டு நடைபெற இருக்கின்றது. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இக்கடடுரை பிரசுரிக்கப்படுகின்றது.)

---

**46ஆம் பக்கம் பார்க்கத் தொடர்ச்சி**

# நினைவலைகள்




அமரர் திருமதி நாகேஸ்வரி திருச்செல்வம்

அமரர் திருமதி நாகேஸ்வரி திருச்செல்வம் அவர்கள் தை மாதம் 27ஆம் திகதி 2017ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தார். அவருடைய கணவனார் திருச்செல்வம் அவர்கள் பேரவையின் நிர்வாகசபை உறுப்பினரும் திருக்கூட்ட உறுப்பினரும் ஆவார். பேரவையின் வளர்ச்சிக்கு பல தார்மீக உதவிகளைச் செய்யும் அவர் பேரவையின் ஆத்மஜோதி நூல்நிலையத்தின் பொறுப்பாளர் ஆவார்.

அமரர் அவர்களின் குடும்பத்தினருக்கு பேரவையினர் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். நல்ல உயர்ந்த பண்புகளைக் கொண்ட அமரர் நாகேஸ்வரி அவர்களின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக


# இந்து சமயப்பேரவைச் செய்திகள்

## சிவயோகசுவாமிகளின் மகா குருபூசை



சிவயோகசுவாமிகளின் வருடாந்த குருபூசை 6-4-2017 வியாழக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகியது. 19ஆவது வருடமாக சுவாமிகளின் நற்சிந்தனை பாடல்களை பேரவையின் திருக்கூட்டத்தினர் மகா குருபூசையை முன்னிட்டு முற்றோதி வருகின்றனர். திருக்கூட்டத்தினருடன் சுவாமிகளின் பக்தர்களும் பங்குபற்றினர். நண்பகல் சிவபூசையும் சிவயோகசுவாமி களின் திருஉருவப் படத்திற்கு திருவடிவணக்கமும் செலுத்தப்பெற்றது. இரவு 10 மணிக்கு நற்சிந்தனை முற்றோதல் நிறைவு பெற்றது. எந்தவித அலுப்போ களைப்போ இல்லாமல் யாவரும் பக்தியுடன் பஙகுபற்றினர். சிவயோகசுவாமிகள் சூக்கும நிலையில் தங்களை வழிநடத்துவதை தாங்கள் உணர்வதாக சிலபக்தர்கள் கூறினர்.

## சித்திரைப் புதுவருடப் பிரார்த்தனை



13-4-2017 வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் புதுவருடப் பிரார்த்தனை திருக்கூட்டத்தினரால் மேற் கொள்ளப்பட்டது. திருமுறைகள், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், சண்முககவசம் போன்ற பாடல்கள் ஓதப்பெற்றன. பூசை வழிபாடுகளுக்கு பின் கைவிசேசம் கொடுக்கப்பெற்றது.

## திருநாவுக்கரசர் குருபூசை



22-4-2017சனிக்கிழமை திருநாவுக்கரசர் குருபூசை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை வெகு சிறப்பாக நடைபெற்றது. நண்பகல் சிவபூசையும் அப்பர் சுவாமிகளின் திருவுருவப் படத்திற்கு திருவடி வணக்கமும்

செலுத்தப்பெற்றது. சுவாமிகளின் 4 5 6 ஆம் திருமுறைகளில் இருந்து தெரிந்து எடுத்த பாடல்கள் ஓதப்பெற்றது. பேரவையின் நிர்வாகசபை உறுப்பினர் ஆசிரியர் சு. சிவதாஸ் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

சித்திரா பௌர்ணமி வழிபாடு



*10-5-2017* புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சித்திரா பௌர்ணமி வழிபாடு ஆரம்பமாகியது. சித்திரகுப்த நாயனார் இயற்றிய சித்திர குப்தரின் கதையை சமூகம் கொடுத்த திருக்கூட்டத்தினர் பாராயணம் செய்தனர். நணபகல் சிவபூசையும் மகேசுரபூசையும் நடைபெற்றது. ஆத்மஜோதி இல்லத்தில் வீற்றிருக்கும் வைரவப்பெருமானுக்கு சிறப்பான படையலும் நடத்தப்பெற்றது.

திருஞானசம்பந்தர் குருபூசை




*10-6-2017* சனிக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை சிறப்பாக சம்பந்தப் பெருமானின் குருபூசை நடைபெற்றது. 1, 2, 3ஆம் திருமுறைகளில் இருந்து தெரிந்து எடுத்த பாடல்கள் திருக்கூடத்தினரால் ஓதப் பெற்றது. நணபகல் சிவபூசையும் சம்பந்தரின் திருவுருவப்படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப்பெற்றது. ஆசிரியர் சு.சிவதாஸ் சிறப்புரை ஆற்றினார்.

---

**31 ஆம் பக்கத் தொடர்ச்சி**

**ஆன்மீக நூல்கள் வெளிவர உதவி புரிதல் ஞானதானம் ஆகும். ஞானதானத்தின் பிரதி பலனாக பரம்பரை பரம்பரையாக கல்விச் செல்வம் பெறலாம். உடல் உழைப்பால் வரும் பணச் செல்வம் இப் பிறப்பிற்கு பயன் தரும். கல்விச் செல்வம் எப்பிறப்பிற்கும் பயன் தரும்.**


**ஞானதானம் பற்றி ஞானிகள் மக்களை ஊக்கப் படுத்துவது இதன் பொருட்டேயாகும். ஞானதானம் செய்து தாங்களும் தங்கள் பிள்ளைகளும் பயன்பெற அன்போடு 'ஆத்மஜோதி' வேண்டுகிறது. தங்களது நிதியுதவியை விருப்புடன் வரவேற்கிறோம்.**

# நினைவலைகள்

அமரர் திருமதி செல்லமுத்து சின்னத்துரை



பேரவையின் திருக்கூட்டத்தின் மூத்த உறுப்பினர் திருமதி. செல்லமுத்து சின்னத்துரை அவர்கள் மிகவும் பக்தியுள்ள அன்னை. அவர்கள் திருமுறை, திருப்புகழ் போன்ற பக்தி இலக்கியங்களில் மிகவும் நாட்டம் உள்ளவர். அவற்றை ஓதுவதில் பேரின்பம் காண்பவர். 2000 ஆம் ஆண்டு தொடக்கம் பேரவை நடத்திய திருமுறை முற்றோதலில் தவறாமல் பங்குபற்றுபவர்.கடந்த 18 வருடங்களில் 15 வருடங்கள் திருமுறை படிப்பதற்கு ஒழுங்காக வரவுதந்து ஒழுங்காக வரவு தந்தமைக்கான கேடயத்தை பெற்றவர். நேரம் தவறாமல் வருகை தந்து முற்றோதல் பூர்த்தியாகும் வரை ஓதும் சுபாவம் உள்ளவர். இந்த வருடமும் தள்ளாத நிலையிலும் நான்கு நாட்கள் திருமுறை முற்றோதலில் பங்குபற்றியவர். அவருடைய தீவிர பக்தியையும் திருமுறைகளில் உள்ள விசுவாசத்தையும் எண்ணி திருக்கூட்டத்தினர் மகிழ்ச்சி அடைகின்றனர். 5-6-2017 இல் தன் 89 ஆவது வயதில் எங்கள் உபாசனா மூர்த்தியாகிய சிவபெருமானின் திருவடியை அடைந்து விட்டார். எமது திருக்கூட்டத்தினர்அவருடைய இறுதிநிகழ்வில் கலந்து கொணடு ஆத்ம சாந்தி பிரார்த்தனையை நிகழ்த்தினர்.



அமரர் திரு. காசிப்பிள்ளை கோபாலபிள்ளை

திரு. காசிப்பிள்ளை கோபாலபிள்ளை அவர்கள் நல்ல ஒரு தொண்டன். அவர் தொண்டு செய்வதற்கே பிறந்தவர் எனப் பலரால் பாராட்டப்பெற்றவர்.

2007ஆம்ஆண்டு இந்துசமயப்பேரவைத் திருமுறை விழாவில் குணமாத்தொணடன் என்னும் பட்டம் சூட்டி

கௌரவிக்கப்பெற்றவர். பேரவையின் நிகழ்வுகளிலும் விழாக் களிலும் அளப்பரிய தொண்டுகளைச் செய்தவர். 26-4-2017 அன்று தனது 86ஆவதுவயதில் இறைவனடி சேர்ந்து விட்டார். அவரின் இறுதிநிகழ்வில் இருநாட்களும் எமது திருக்கூட்டத்தினர் கலந்து கொண்டு ஆத்மார்த்தமான பிரார்த்தனையைச் செய்தனர்.

**அமரர் திரு. காசிப்பிள்ளை கனகரத்தினம்**



திரு. காசிப்பிள்ளை கனகரத்தினம் ஐயா அவர்கள் பேரவையின் ஆரம்ப காலஉறுப்பினர். பல வருடங்கள் உபதலைவர் ஆக இருந்தவர். பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் பேரன்புக்குரியவர். பேரவையில் மிகவும் விசுவாசமான ஐயா அவர்கள் பேரவையின் ஆரம்ப காலங்களில் பேரவைக்கு உதவிக்கரமாக இருந்தவர்.அவரின் இறுதி நிகழ்வுகளில் பேரவையினர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியதுடன் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் பங்குபற்றினர்.

**அமரர் திருமதி மீனாம்பிகை இரத்தினம்பிள்ளை**



திருக்கூட்ட உறுப்பினர்களால் மீனா அம்மா என அன்பாக அழைக்கப்பெற்ற மீனாம்பிகை அவர்கள் 1999ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆண்டுவரை பேரவையின் முற்றோதல் நிகழ்வுகளில் பங்குபற்றி சிறப்பித்தவர். மிகவும் இனிமையான அன்பான சுபாவம் உள்ள அன்னை அவர்கள் திருவாசகம் ஓதும் பொழுது பக்தியுடன் அழுது அழுது ஓதும் பாங்கைப்பார்க்கும் பொழுது மெய்சிலிர்க்கும். அன்னை அவர்களின் இறுதிநிகழ்வுகள் இருநாட்களும் திருக்கூட்டத்தினர் பங்குபற்றி அஞ்சலி செலுத்தியதுடன் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் செய்தனர்.

தொடர்ச்சி 42ஆம் பக்கம் பார்க்க

## ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம்

- ஆலயம் என்ற ஒரு சொல்லுக்கு ஆன்மா ஒடுங்கும் இடம் என்பது ஒரு பொருள்.

- ஆலயம் என்ற சொல்லுக்கு ஆணவம் ஒடுங்கும் இடம் இன்னொரு பொருள்

- ஆலயமாவது எங்கும் வியாபகமாய் மறைந்திருக்கும் கடவுள் தம்மை ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு சாநித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடம் ஆகும்.

- சைவர்களாகிய எமக்கு ஆசாரியர்களாக எப்பொழுதும் விளங்குபவர்கள் முக்கியமாக நால்வர் சம்பந்தர் அப்பர் சுந்தரர் மணிவாசகர் ஆகிய நால்வரும் ஆவார்கள்

- சமயகுரவர்கள் நால்வரும் தாம் பாடிய திருமுறைகளில் இன்றும் வாழ்ந்து கொணடிருககிறார்கள்.

- சமயகுரவர் நால்வரும் ஆலயம் உள்ள இடமெல்லாம் சென்று வணங்கியதோடு அமையாது தாம் அனுபவித்த இன்பங்களை திருமுறைப் பாடல்களாகவும் பாடியுள்ளனர்.

- ஆலயவழிபாடு அறிகுறியாக அறிவை வளர்க்கும்.

- ஆலயவழிபாடு அருள் நெறியாக அன்பை வளர்க்கும்.

- ஆலயவழிபாடு அனுபவவாயிலாக அழியாப் பேரின்பத்திற்கு அடிகோலும்.

- வாழ்க்கை புயலிலே அகப்பட்டு தவிக்கும் மக்களுக்குக் கலங்கரை விளக்காக விளங்குபவை ஆலயங்களாகும்.

- சைவத்தமிழ் மக்கள் யாவரும் தினமும் ஆலயம் சென்று வழிபட வேண்டும்.

- நாடோறும் செல்ல முடியாதவர்கள் வாரம் ஒருமுறையேனும் ஆலயம் சென்று வழிபட வேண்டும்.

- சேவை மனப்பான்மை உடைய ஒரு ஆசிரியனால் தான் சேவை மனப்பான்மை உள்ள சமூகத்தை உருவாக்க முடியும். உடலில் உயிர் போன்றவன் சமூகத்தில் ஆசிரியன்.

- எல்லாரும் ஆசியர்களாகிவிட முடியாது. தொழில் கிடைத்த பின்பாவது தன்னை ஆசிரியனாக்கி கொள்ள முடியாதவன் அத்தொழிலை உதறிவிட்டு செல்லுதல் சமூகத்திற்கு செய்த ஒரு தொண்டாகும்.

- மனித வாழ்கையில் பிழை செய்ய சந்தர்ப்பம் கிடைக்காததனால் தான் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமாணோர் நல்லவர்கள் என்ற பெயரைப் பெறுகிறார்கள்.

- விருப்பு வெறுப்பு கொள்கை வேறுபாடு மாணவருடைய உள்ளத்திலே பலவித மாறுபாடுகளை ஏற்படுத்துகின்றன.

- மாணவர்கள் பருவ உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒழுக்கத்தை பாழ்அடிக்கின்றார்கள்.

- உள்ளம் பண்படுகின்ற அளவுக்கு ஒருவன் மேலோன் ஆகின்றான். உள்ளம் கீழ்நோக்கி போகும் அளவிற்கு மிருக நிலைக்கு செல்கின்றான்

- அழகிய ஒரு மாளிகையை மண்ணுள் மறைந்திருக்கும் அத்திவாரக்கல் தாங்கிநிற்பது போல ஒருநல்ல சமுதாயத்தைத் தாங்கி நிற்பவனும் ஆசிரியனே ஆவார்.

# கனகாம்பிகை

**தங்க நகைமாளிகை & நகை அடகுமாடம்**

சகலஓடர்களும், திருத்த வேலைகளும் விசேட விலைச் சலுகையில் செய்து கொடுக்கப்படும்

சிங்கப்பூர் புதிய நகைகள் அனைத்தும் நகரில் வேறு எங்கும் பெறமுடியாத மலிவு விலையிலும், குறித்த நேரத்தில் உங்கள் எண்ணங்களுக்கு ஏற்றவாறு நகைகளை ஓடருக்குக்கும் பெற்றுக் கொள்ளலாம்

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டி வீதத்தில்
அடைவுபிடிக்க நம்பிக்கை,
நாணயம், உத்தரவாதத்துடன் கூடிய
**கனகாம்பிகை**
**நகை அடைவு மாடம்**

அரச அங்கீகாரம்
பெற்ற அடைவு
நகைமாடம்

22 கரட் அகல் தங்க ஆபரணங்கள்
நவரத்தின மோதிரங்கள்
வைரக் கற்கள் (பவளம், முத்து)
பரிசுப் பொருட்கள்
மாணிக்கக் கற்கள்
தாலிக்கொடி காது குத்தல்



LUCKY STONES
FINEST QUALITY 22K
GOLD & DIAMOND
JEWELLERY



**KANAGAAMBIKAI GOLD HOUSE & PAWN BROKERS**

3160 Eglinton Ave. East, Unit 3
Scarborough, ON. M1J 2H3
TEL: 416-269-7197

2613 Eglinton Ave. East
Scarborough, ON. MK 2S2
TEL: 416-269-7198



idential / Commercial / Investment

**HomeLife/Miracle**
**Realty Ltd.** Brokerage
Independently Owned & Operated

Tel: 905-455-5100
Fax: 905-455-5110

'இடம்பட வீடு எடேல் - *Build your house meeting your needs*"

**Jey Sellappah** B.Eng (civil), NCTech (civil), GDipJS
Member of OACETT
Sales Representative

Dir: 647-618-0354
realtorj007@gmail.com

MLS

# விவேகா அச்சகம்

**VIVEKA**
*Printers*

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**416 269 1994**